

www.padippkam.com

1917 ரசிய புரட்சி, 1949 சீனப் புரட்சி
ஆகிய இரண்டுமே பாட்டாளி வர்க்கத்
தலைமையிலான முதலாளிய ஜனநாயகப்
புரட்சிகளாக இருந்தன.
இப்புரட்சிகள் உலகப் பாட்டாளி வர்க்க
இயக்கத்தின் வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும்
எண்ணற்ற அனுபவங்களை அள்ளி வழங்கின;
அரை நிலப்பிரபுத்துவ சமூகப் பொருளாதார
அமைப்புகளைக் கொண்ட நாடுகள்
எந்தப் பாதையில் முன்னேறுவது,
முதலாளித்துவப் பாதையிலா?
சோசலிசப் பாதையிலா? என்ற கேள்விக்கு
உறுதியாகவும், தீர்க்கமாகவும், தெளிவாகவும்
'சோசலிசப் பாதையில்' என்று பதிலளித்தன.
இந்நூல் இவ்விரு புரட்சிகளையும் தொகுத்து,
பாட்டாளி வர்க்கத் தலைமையிலான
முதலாளிய ஜனநாயகப் புரட்சியின்
பொருளையும், முக்கியத்துவத்தையும்
நிறுவுகின்றது.



# இருபெரும் புரட்சிகளின் மாபெரும் படிப்பினைகள்



கார்முகில்

படிப்பகம்

www.padippkam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!

தநாமாலெக

படிப்பகம்

www.padippkam.com

# இருபெரும் புரட்சிகளின் மாபெரும் படிப்பினைகள்

கார்முகில்

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

முதற்பதிப்பு : அக்டோபர் 1983
இரண்டாம் பதிப்பு : சனவரி 2004

விலை ரூ. 20

**அக்டோபர் - நவம்பர் 1981 புரட்சிக்கனல் இதழில் வெளிவந்தது.**

# இருபெரும் புரட்சிகளின் மாபெரும் படிப்பினைகள்

இருபதாம் நூற்றாண்டில் உலகைக் குலுக்கிய மாபெரும் புரட்சிகளில் ரசியப் புரட்சியும் சீனப் புரட்சியும் முதன்மை யானவையாகும். ரசியப் புரட்சி 1917 அக்டோபரில் மார்க்சிய–லெனினியத்தின் வெற்றியை உலகின் உச்சி முகட்டிலிருந்து பிரகடனப் படுத்தியது. அதற்கு முப்பத்திரண்டு ஆண்டுகள் கழித்து 1949இல் அதே மாதத்தில் ரசியப் புரட்சியின் வெற்றியால் வழி நடத்தப்பட்ட சீனப் புரட்சியின் வெற்றி உலகுக்கு அறிவிக்கப்பட்டது. அது மார்க்சிய – லெனினியத்தின் வெற்றியை மீண்டும் ஒரு முறை உலகுக்கு பறைசாற்றுவதாய் இருந்தது. இரண்டு புரட்சிகளுமே பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சிகளாக இருந்தன. இவ்வொற்றுமையுடன் கூடவே இவ்விரு புரட்சிகளும் அவற்றுக்கே உரிய வேறுபட்ட சிறப்பம்சங்களையும் கொண்டிருந்தன. உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும் எண்ணற்ற அனுபவங்களை அள்ளி வழங்கிய இவ்விரு புரட்சிகளும், அரை நிலப்பிரபுத்துவ சமூக, பொருளாதார அமைப்புகளைக் கொண்ட நாடுகள்; எந்தப் பாதையில் முன்னேறுவது முதலாளித்துவப் பாதையிலா, சோசலிசப் பாதையிலா என்ற கேள்விக்கு உறுதியாகவும், தீர்க்கமாகவும், தெளிவாகவும் சோசலிசப் பாதையில் என்று பதில் அளித்தன. பின் தங்கிய, அரை நிலப்பிரபுத்துவ சமூக, பொருளாதார அமைப்பைக் கொண்டிருக்கும் நமது நாட்டில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் முதலாளிய ஜனநாயகப் புரட்சியை நடத்தும் மாபெரும் கடமையை எதிர் கொண்டிருக்கும் நாம் இவ்விரு நாடுகளின் அக்டோபர் புரட்சிகளையும் தொகுத்தறிவதன் மூலம் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் பொருளையும், முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ள முயலுவோம்.

www.padippakam.com



"முதலாளித்துவப் புரட்சி என்பது பழங்காலத்தின் மீத மிச்சங்களை, பண்ணை அடிமைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் அமைப்பு முறையின் மீதமிச்சங்களை மிகவும் உறுதியாகத் துடைத் தெறிந்துவிட்டு முதலாளித்துவத்தின் மிகவும் விரிவான, சுதந்திரமான, விரைவான வளர்ச்சிக்கு உத்திரவாதம் செய்கிற புரட்சி எழுச்சியாகும்" என்றார் லெனின்.[1]

1649இல் நடந்த இங்கிலாந்து புரட்சி, 1789இல் நடந்த பிரெஞ்சுப் புரட்சி, 1848இல் நடந்த ஜெர்மானியப் புரட்சி, 1905லும், 1917 பிப்ரவரியிலும் நடந்த ரசியப் புரட்சி இவைதான் நவீன அய்ரோப்பாவின் முதன்மையான முதலாளி வர்க்கப் புரட்சிகளாகும். அதாவது நிலப்பிரபுத்துவம் மற்றும் மத்தியகால மீதமிச்சங்களை எதிர்த்து முதலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்திற்காக நடத்திய புரட்சிகளாகும்.

1789 பிரெஞ்சுப் புரட்சி பற்றி மார்க்ஸ் கீழ்க்கண்டபடி எழுதினார்:

"1789 ஆகஸ்ட் 4 ல், பாஸ்தீல் சிறைச்சாலையை நொறுக்கி மூன்று வாரங்கள் ஆனபின் ஒரே நாளில் பிரெஞ்சு மக்கள் எல்லா நிலப்பிரபுத்துவச் சுமைகளையும் தூக்கி எறிந்தார்கள்."

"1780ஐ சேர்ந்த பிரெஞ்சு முதலாளி வர்க்கம் தன்னுடைய நேச சக்தியான விவசாய மக்களை ஒரு கணமேனும் நட்டாற்றில் விட வில்லை. தன்னுடைய ஆட்சி கிராமப்புறத்தில் நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பதில் ஆதாரப்பட்டிருக்கிறது என்றும், ஒரு சுதந்திரமான நிலமுள்ள விவசாய வர்க்கத்தைப் படைப்பதில் ஆதாரப் பட்டிருக்கிறது என்றும் அதற்குத் தெரிந்திருந்தது."[2]

1848 ஜெர்மன் புரட்சியில் முதலாளி வர்க்கத்தின் போக்கு வேறுமாதிரி இருந்தது. அது பற்றி மார்க்ஸ் கீழ்க் கண்டபடி எழுதினார்:

" புரட்சியின் விளைவுகள் இரு அம்சங்களை நிரூபித்தன. ஒரு புறத்தில் மக்களை ஆயுதபாணியாக்கல், சங்கம் அமைக்கும் உரிமை, மக்களின் மேலாதிக்கத்தை உண்மையாகச் சாதித்தல்; மறுபுறத்தில், முடியரசையும் காம்ப் ஹாவுஸன் – ஹான்ஸிமன் அமைச்சரவையையும் – அதாவது பெருமுதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளின் அரசாங்கத்தை – நீடித்து வைத்திருத்தல். ஆக, புரட்சி இருவகையான விளைவுகளைப் பெற்றிருந்தது. அவை பிரிந்து செல்வது தவிர்க்க முடியாதது. மக்கள் வெற்றி பெற்றிருந்தார்கள்; நிர்ணயமான ஜனநாயகத் தன்மையுள்ள சுதந்திரங்களை வென்றிருந்தார்கள்; ஆனால் உடனடி அரசியல் அதிகாரம், அவர்கள் கைக்கு வராமல் பெருமுதலாளி வர்க்கத்தினரின் கைக்கு வந்துவிட்டது. சுருங்கச் சொன்னால் புரட்சி நிறைவு பெறவில்லை. மக்கள் பெருமுதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளை அமைச்சரவை அமைக்க விட்டுவிட்டார்கள். இந்த பெருமுதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் பழைய பிரசிய பிரபுத்துவ வம்சத்தினரோடும் அதிகார வர்க்கத்தினரோடும் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு தங்களுடைய விருப்பத்தை உடனே காட்டிக்கொண்டார்கள். அர்னிம், கானிட்ஸ், ஷ்வேரின் ஆகியோர் அமைச்சரவையில் சேர்ந்தனர்."



"என்றென்றும் புரட்சி எதிர்ப்புள்ள மேல்தட்டு முதலாளி வர்க்கத்தினர் மக்களிடமுள்ள பயத்தால் அதாவது தொழிலாளி களிடமும் ஜனநாயகப் போக்கான முதலாளி வர்க்கத்தாரிடமும் உள்ள பயத்தால் பிற்போக்காளர்களுடன் காத்துக் கொள்ளும் தன்மையுடையதும், தாக்குதல் தன்மையுடையதுமான கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டார்கள்."[3]

ஜனநாயகப் போக்கான முதலாளித்துவ வர்க்கம் என்று இங்கு மார்க்ஸ் குறிப்பிட்டது பிற்போக்கை எதிர்ப்பதில் விவசாயிகளைத் தனது இயல்பான நேச சக்தியாகக் கொண்டிருக்கும் முதலாளித்துவ வர்க்கத் தினரையும் அவர் 'மக்கள்' என்று குறிப்பிட்டது பாட்டாளி வர்க்கமும், விவசாயி மக்களும் முக்கியமாய் உள்ளடங்கிய பகுதியினரையும் ஆகும்.[4]

இப்புரட்சியில் அமைச்சரவையில் இடம் பெற்ற பெரு முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள் நிலப்பிரபுத்துவச் சுமைகளை ஒழிப்பதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டனர். உண்மையில் நிலப்பிரபுக்களின் மனதைப் புண்படுத்தாமல் அதைச் செய்யப் போவதாகக் கூறி நிலப் பிரபுத்துவத்தைப் பெருமளவில் அப்படியே விட்டுவைத்தனர். "1848இல் நடந்த ஜெர்மன் புரட்சி 1789இல் நடந்த பிரெஞ்சுப் புரட்சியின் போலியே" என்று மார்க்ஸ் எழுதினார்.

அவர் மேலும் கூறினார்:

"1848 ஜூலை 11இல் மார்ச்சு தெரு அரண்கள் எழுப்பி நான்கு மாதங்கள் ஆனபின் நிலப்பிரபுத்துவச் சுமைகள் ஜெர்மன்

படிப்பகம்

www.padippkam.com



மக்களை முறியடித்தன.... 48ஐ சேர்ந்த ஜெர்மன் முதலாளி வர்க்கம் சிறிதும் மன உறுத்தல் இல்லாமல் தனது மிகவும் இயல்பான நேச சக்தியாகிய, தனது சதையோடு சதையாக உள்ள விவசாயிகளுக்குத் துரோகம் செய்து வருகிறது; விவசாயிகள் இல்லாமல் அது பிரபுக்களை எதிர்த்து நிற்க முடியாது... நிலப்பிரபுத்துவ உரிமைகளின் நீடிப்பு, (மாயமான) மீட்பு என்கிற மாறுவேடத்தில் அவை நீடித்திருக்க அனுமதி – இதுதான் 1848ஆம் வருடத்திய ஜெர்மன் புரட்சியின் விளைவு. மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாயிற்று.''

இப்புரட்சியைப் பற்றி மேலும் மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''1789ஆம் ஆண்டுப் புரட்சி குடியானவர்களின் நிலப் பிரபுத்துவச் சுமைகளை உலுப்பி எறிவதில் துவங்கி இருக்க; 1848ஆம் ஆண்டு புரட்சி மூலதனத்தை அபாயத்திற்குள்ளாக்காது இருக்கும் பொருட்டும், அரசாங்கப் பொறியை ஓடும் நிலையில் வைத்துக் கொண்டிருக்கவும் ஒரு புதிய வரியைக் கிராமப்புற மக்கள் மீது சுமத்துவதில் தன்னை அறிவித்துக் கொண்டது.'' [5]

1871இல் எழுந்த பாரீஸ் கம்யூன் எழுச்சி முதலாளி வர்க்கத்திற்கு பெரும் அடியாக இருந்தது. அது புதுவகை அரசாங்க அமைப்பை முன்வைத்தது. மக்களிடமிருந்து தனிமைப்பட்ட இராணுவ அமைப்புக்குப் பதில் மக்களே ஆயுதம் தாங்கிய மக்கள் படையை கொண்டிருந்தது. சட்டமியற்றும் அமைப்பும், சட்டத்தை நிறைவேற்றும் அமைப்பும் தனித்தனியாக இல்லாமல் ஒன்றாக இருந்தது. சிறுபான்மையினரின் ஆட்சி அதிகாரத்திற்குப் பதிலாக பெரும்பான்மையினரின் ஆட்சி அதிகாரத்தை முன்வைத்தது. வரலாற்றில் ஜனநாயகமானது என்று குறிப்பிடப்பட்ட வேறு எந்த அரசு முறையை விட உண்மையிலேயே உன்னதமான ஜனநாயக அரசாக இருந்தது. இதனால் முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தைக் கண்டு மேலும் அஞ்சியது. எவ்விதத் தயக்கமும் இன்றி பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக பிற்போக்கு நிலப்பிரபுத்துவ சக்திகளுடன் சமரசம் செய்து கொண்டது.

1905லேயே இரசிய முதலாளிகளைப் பற்றி லெனின் கீழ்க்கண்டபடி சரியாகவே குறிப்பிட்டார்.



''1789, 1848, 1871 ஆகிய ஆண்டுகளில் இருந்ததைவிட இப்போது பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் உள்ள பகை மேலும் ஆழமாக உள்ளது. எனவே பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் குறித்து முதலாளி வர்க்கம் கூடுதலாகவே அஞ்சும். அது பிற்போக்கிடம் தயக்கமின்றி சரணடைந்து விடும்.'' [6]

மேலும் 1905 புரட்சியின் போது இரசிய முதலாளி வர்க்கத்தின் நடத்தை பற்றி லெனின் கூறினார் :

''மிதவாத முதலாளி வர்க்கம் ஜார் அரசாங்கத்தைத் தூக்கி எறியுமாறு கோரவில்லை. தற்காலிகப் புரட்சி அரசாங்கம் வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைக்கவில்லை. தேர்தல்கள் முற்றிலும் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடப்பதற்கும், பிரதிநிதிகளின் சபை உண்மையிலேயே அனைத்து மக்களுடைய தாகவும், உண்மையிலேயே அரசியலை நிர்ணயிப்பதாகவும் இருப்பதற்கும் உண்மையான உத்திரவாதங்கள் வேண்டும் என வற்புறுத்தவில்லை. உண்மை என்னவெனில் மிதவாத முதலாளி வர்க்கத்தினர் ஜார் மன்னனுக்கும் புரட்சிகர மக்களுக்கும் இடையே முடிந்த வரை ஒரு அமைதியான பேரத்தை – முதலாளி வர்க்கமாகிய தமக்கு அதிக பட்சமான அதிகாரத்தையும், புரட்சிகரமான மக்களாகிய பாட்டாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் குறைந்த பட்ச அதிகாரத்தையும் கொடுக்கிறதாய் உள்ள ஒரு பேரத்தை நடத்தி முடிக்க முயற்சிக்கின்றனர்.'' [7]

1917 பிப்ரவரியில் இரசிய முதலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னரும் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசமாகவே சென்றது. அதனுடன் கூட்டமைத்துக் கொண்டு பாட்டாளி வர்க்க அமைப்புகள் மீதும், இயக்கங்கள் மீதும் கொடிய அடக்கு முறைகளை ஏவியது. அது பற்றியும் லெனின் குறிப்பிடுகிறார்.

''மன்னராட்சி அதிகாரப்பூர்வமாக இன்னும் ஒழிக்கப்பட வில்லை. ரோமனவ் கூட்டத்தினர் இன்னும் தொடர்ந்து முடியாட்சி சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். நிலப்பிரபுக்களின் ஏராள மான நில உடைமைகள் இன்னும் ரத்து செய்யப் படவில்லை.''

''அதிகாரத்திற்கு வந்த பின்னர் 1906 –14 காலகட்டத்தில் ரத்த வெறி பிடித்த நிகோலய்க்கும், கொலைகாரனான

படிப்பகம்

www.padippkam.com



ஸ்டாலிபினுக்கும் மிகத் தீவிர ஆதரவாளர்களாயிருந்த மன்னராட்சி ஆதரவாளர்களுடன் (குச்சாச்காவ் மற்றும் காடெட்டுகளின் வலதுசாரி கூட்டத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள்) முதலாளிகள் கூட்டணி (கூட்டுறவு) அமைத்துள்ளனர். லவாவ் கூட்டத்தினரின் புதிய முதலாளி சர்க்கார் மன்னராட்சியை இரசியாவில் மீண்டும் ஏற்படுத்துவதற்காக ரோமணவ்களுடன் ஒப்பந்தம்பேச ஆரம்பித்துள்ளது.''

''புரட்சிகரமான வார்த்தை ஜாலங்களை பிரயோகித்துவிட்டு பழைய ஆட்சியாளர்களின் ஆதரவாளர்களை இந்த அரசாங்கம் முக்கிய பதவிகளில் நியமித்து வருகிறது. அரசு எந்திரத்தில் (போலீஸ், இராணுவம், அதிகார வர்க்கம்) எவ்வளவு குறைந்த சீர்திருத்தங்கள் செய்ய முடியுமோ அவ்வளவுதான் அரசாங்கம் செய்துள்ளது. அதை (அரசு எந்திரத்தை) முதலாளிகளிடம் ஒப்படைத்துள்ளது. வெகு ஜனங்களின் புரட்சிகரமான முன் முயற்சிக்கும், நடவடிக்கைகளுக்கும் எதிராகவும், புரட்சியின் உண்மையான வெற்றிக்கு ஒரே உத்திரவாதமான கீழிருந்து மக்கள் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு எதிராகவும் ஏற்கெனவே இடையூறுகளை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளனர்.''

''அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கான தேதியைக் கூட இந்த அரசாங்கம் இன்றுவரை நிர்ணயிக்கவில்லை. நிலப்பிரபுத்துவ ஜார் ஆட்சிக்கு மூலஅஸ்திவாரமான நிலப் பண்ணைகள் மீது கை வைக்கவில்லை. முதலாளிகளின் ஏகபோக நிதி ஸ்தாபனங்கள், பெரிய பாங்குகள், சிண்டிகேட்டுகள் இவற்றின் நடவடிக்கை பற்றி விசாரணை செய்து அவற்றின் நடவடிக்கை களைப் பகிரங்கப்படுத்துவது பற்றியோ அல்லது அவற்றின் மீது கட்டுப்பாடு விதிப்பது பற்றியோ இந்த சர்க்கார் சிந்திக்கக்கூட இல்லை.''

''சர்க்காரில் முக்கியமான, தீர்மானமான மந்திரி ஸ்தானங்கள் (ராணுவம், போலீஸ், அதிகார வர்க்கம் மற்றும் மக்களை ஒடுக்கும் அனைத்து உள்நாட்டு மற்றும் யுத்த துறைகள், அமைச்சகங்கள்) அனைத்தும் நிலப்பெரும் பண்ணையுடைமையையும், எதேச்சதிகார ஆட்சி முறையையும் ஆதரிப்பவர்களால் நடத்தப் படுகின்றன. தங்களுடைய விருப்பங்களுக்கு விரோதமாக முன்னாளில் குடியரசுவாதிகளாய் இருந்த கேடட்களுக்கு



சிறு பதவிகள் தரப்பட்டுள்ளன. இவர்களுக்கு அரசு அதிகார எந்திரத்தின் மீதோ, மக்கள் மீதோ அதிகாரம் செலுத்தக் கூடிய நேரடி உறவு எதுவும் இல்லை. 'சோசலிஸ்டுகள்' என்று சொல்லப்படும் துருதோவிக்கான கெரென்ஸ்கிக்கு தீவிரமான வாய்ச்சொற்கள் மூலம் மக்களை திசை திருப்புவதைத் தவிர வேறு வேலை கிடையாது.'' [8]

ஆனால் அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாடான சீனத்தில் சீன முதலாளி வர்க்கத்தின் குணம் இதனின்றும் சற்று மாறுபட்டதாக இருந்தது. பல்வேறு அதிகார வர்க்க யுத்தப் பிரபுத்துவ நிலப்பிரபுக்களின் ஆட்சிகளின் ஒடுக்கு முறைக்கும், பல்வேறு ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்புக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாகி யிருந்த சீன தேசிய முதலாளி வர்க்கம் இதன் காரணமாக புரட்சிகரமானதாக இருந்தது. 1911 புரட்சியில் டாக்டர் சன்யாட் சன் தலைமையில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி ஒன்றை அது தலைமை ஏற்று நடத்தியது. பின்னர் 1926இல் வடக்குப் படை யெடுப்பிலும் அது முக்கிய பங்காற்றியது. டாக்டர் சன்யாட் சன் சோவியத் உறவு, கம்யூனிஸ்ட் கட்சியுடன் உறவு, தொழிலாளி – விவசாயிகளுக்கு ஆதரவு என்ற முப்பெரும் ஜனநாயக லட்சியங்களை முன் வைத்திருந்தார். ஆனால் சீன தேசிய முதலாளி வர்க்கம் 1927க்குப்பின் புரட்சிக்கு துரோகமிழைத்து ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவளித்தது. எனினும் அது இரசிய முதலாளி வர்க்கத்திடமிருந்து வேறுபட்டிருந்தது. குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட அளவுக்கு புரட்சிகரத் தன்மையுடையதாய் இருந்தது.

அந்த வர்க்கத்தைப் பற்றி மாவோ கூறுகிறார் :

''சீன முதலாளிகள், ஏகாதிபத்தியவாதிகளால் ஒடுக்கப்படும் காலனிய, அரைக் காலனிய நாட்டு முதலாளிகளாகும். அதனால் தான் அவர்கள் ஏகாதிபத்திய சகாப்தத்தில் கூட ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஏகாதிபத்தியத்தையும் தன் சொந்த நாட்டின் அதிகார வர்க்க யுத்தப் பிரபுக்களின் அரசையும் எதிர்க்கும் புரட்சிகரமான குணத்தை இன்னும் கொண்டிருக் கிறார்கள். 1911ஆம் ஆண்டு புரட்சியும் வடதிசைப் படை யெடுப்பும் இதற்கு உதாரணங்கள் ஆகும். அப்போது சீனாவில் முதலாளி வர்க்கம் பாட்டாளிகளுடனும் குட்டி முதலாளிகளுடனும்

படிப்பகம்

www.padippkam.com



ஒன்று சேர்ந்து, தான் எதிர்க்க விரும்பும் எதிரியை எதிர்த்தது. இந்த விதத்தில் தான் பழைய ஜாரிச இரசியாவில் இருந்த முதலாளிகளிடமிருந்து இன்றைய சீன முதலாளிகள் வேறு படுகின்றனர். வேறு நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த இராணுவ ஏகாதிபத்திய நாடாக ஜாரிச ரசியா இருந்ததால், ரசியாவில் அன்றைய முதலாளிகளிடம் புரட்சிகர உணர்வு முற்றிலும் இல்லை. எனவே ரசியாவில் பாட்டாளி வர்க்கத்தின் கடமை முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதே அன்றி அதனுடன் ஒன்று சேர்வதில்லை என்பதாகும். ஆனால் காலனிய, அரைக் காலனியத் தன்மை கொண்ட நாடான சீனாவில் – இதர ஏகாதிபத்திய சக்திகளால் ஒடுக்கப்படும் நாடான சீனாவில் – முதலாளி வர்க்கம் குறிப்பிட்ட கட்டங்களில் குறிப்பிட்ட அளவுக்கு புரட்சிகரத் தன்மை பெற்றதாய் இருக்கிறது.''

''அதே சமயத்தில், சீன முதலாளி வர்க்கம் ஒரு காலனிய, அரைக் காலனிய நாட்டைச் சேர்ந்த முதலாளி வர்க்கமாயிருப்பதால், அரசியல் வகையிலும் அது மிகவும் பலவீனமாய் உள்ளதுடன், புரட்சியின் எதிரிகளுடன் சமரசவாதப் போக்கைக் கைக் கொள்வதாகவும் உள்ளது. சீன முதலாளி வர்க்கம் புரட்சியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் போதே, ஏகாதிபத்தியத்துடன் உறவுகளை முழுமையாகத் துண்டித்துக் கொள்ள விரும்பவில்லை. மேலும் அது கிராமப்புற நிலப்பிரபுத்துவ சுரண்டல் முறையோடு நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளது. எனவே, ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் முழுமையாக ஒழித்துக் கட்ட விரும்பவில்லை. அவ்வாறு ஒழித்துக் கட்டவும் அதற்கு சாத்தியமில்லை. இவ்வாறு சீன முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் இரு அடிப்படைப் பிரச்சினைகளும் அல்லது கடமைகளும் எந்த விதத்திலும் தேசிய முதலாளிகளால் நிறைவேற்றப்படப் போவதில்லை.''

''கோமிண்டாங் கட்சியால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் சீனாவின் பெரும் முதலாளிகளைப் பொறுத்தவரை, 1927 முதல் 1937 வரையிலான காலகட்டத்தில் ஏகாதிபத்தியங்களோடு கொஞ்சிக் குலாவி, புரட்சிகர மக்களுக்கு எதிராக நிலப் பிரபுத்துவ சக்திகளோடு கூட்டுச் சேர்ந்தனர். 1927ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்திய காலத்திலும் சீன தேசிய



முதலாளிகள் எதிர்ப் புரட்சிப் போக்கையே கைக்கொண்டிருந்தனர். தற்போதைய ஜப்பானிய எதிர்ப்புப்போரின் போதும், வாங்சிங் வீ யினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் பெரும் முதலாளிகளில் ஒரு பிரிவினர் எதிரியிடம் சரணடைந்தனர். அது இவ்வர்க்கத்தின் புதிய துரோகத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. இந்த விசயத்தைப் பொருத்தமட்டில், இப்போது சீன முதலாளி வர்க்கம் அய்ரோப்பா, அமெரிக்க நாடுகளிலும் குறிப்பாக பிரான்சிலும் இருந்த பழைய முதலாளிகளிடமிருந்து வேறுபடுகின்றது. அந்த நாடுகளில் உள்ள முதலாளிகள் குறிப்பாக பிரான்சில் இருந்த முதலாளிகள் அவர்களின் புரட்சி சகாப்தத்தில் அதாவது புரட்சியின்போது முழுமையான புரட்சிகர உணர்வு பெற்றிருந்தனர். சீன முதலாளி களைப் பொருத்தமட்டில் இந்த குணாம்சம் முழுமையின்றி உள்ளது.''

''ஒரு புறத்தில் புரட்சிகரமான குணாம்சம், மற்றொரு புறத்தில் சமரசக் குணாம்சம், சீன முதலாளி வர்க்கத்தின் இரட்டை குணாம்சம் அய்ரோப்பிய அமெரிக்க முதலாளிகளிடையே கூட காணப்பட்டது. எதிரி தங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் போது அந்த எதிரியைத் தாக்குவதற்காக பாட்டாளி களுடனும் விவசாயிகளுடனும் ஒன்று சேர்வதும் முதலாளி வர்க்க குணாம்சமாகும். இது உலகம் முழுவதிலும் உள்ள முதலாளி வர்க்க குணாம்சம் என்றாலும் சீனாவில் அதிகம் உள்ளது.'' [9]

சீனம் பல்வேறு ஏகாதிபத்தியங்களின் ஒடுக்கு முறைக்கு உட்பட்டிருந்ததாலும், ராணுவ வகையில் மட்டுமின்றி தொழிற் சாலைகள், ரயில்வே, சுரங்கம், ஆலைகள், போக்குவரத்துக்கள், வங்கிகள் போன்ற முக்கிய துறைகள் அனைத்தும் ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் இருந்ததாலும் சீன தேசிய முதலாளிய வர்க்கம் பலவீன மாக இருந்ததுடன் ஏகாதிபத்தியத்துடனும், நிலப்பிரபுத்துவத் துடனும் கூட்டு வைத்துக் கொள்வதாகவும் பின் தங்கியதாகவும் இருந்தது. இதனால் இவ்வர்க்கம் சீனாவில் ரசிய முதலாளி வர்க்கத்தை விட பலவீனமாய் இருந்தது. புரட்சியில் தலைமை தரவோ, முன் முயற்சி எடுக்கவோ சக்தியற்றிருந்தது.

முதலாளித்துவம் தோன்றும் போதே உடன் பாட்டாளி வர்க்கத்தையும் தோற்றுவிக்கிறது. பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ நலன்களுக்கு நேர் விரோதமான நலன்களைக் கொண்டிருக்கிறது.

www.padippkam.com



எனவே முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தையும் அதன் வளர்ந்துவரும் இயக்கத்தையும் கண்டு அஞ்சுகிறது. எல்லா வகையான சுரண்டலுக்கும் பிற்போக்குக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் குண இயல்பை பாட்டாளி வர்க்கம் பெற்றிருக்கும்போது முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவத்தை மட்டும் ஒழித்துவிட்டு முதலாளித் துவத்தைக் கட்டிக்காக்க நிற்கிறது. தன்னுடன், தன் வளர்ச்சியுடன் கூடவே வளர்ந்துவரும் பாட்டாளி வர்க்கத்தையும் அதன் இயக்கத்தையும் கண்டு, இதன் காரணமாக அஞ்சுகிறது. எனவே பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு எதிராக பிற்போக்குடன் அது சமரசம் செய்து கொள்கிறது. எந்த அளவுக்கு பாட்டாளி வர்க்க இயக்கம் வளர்ந்தும் தீவிரமாகவும் இருக்கிறதோ அந்த அளவுக்கு அது பிற்போக்குடன் சமரசம் செய்து கொள்கிறது. நிலப்பிரபுத்துவமும், மத்தியகால மிச்சசொச்சங்கள் அனைத்தும் முதலாளித்துவத்தின் விரைவான, முழுமையான, சுதந்திரமான வளர்ச்சிக்குத் தடைகளே எனினும் தனக்குச் சவக்குழி தோண்டும் பாட்டாளி வர்க்கத்தை விட முதலாளி வர்க்கத்துக்கு அவையே கூட்டாளிகளாக இருக்க முடியும் என்பதை முதலாளி வர்க்கம் அறிந்து கொள்கிறது. நிலப்பிரபுத்துவத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் இடையே பொதுவாக உள்ள, சுரண்டல், ஆதிக்கம், மக்கள் எதிர்ப்பு என்ற குணாம்சங்கள் அவற்றுக்கிடையே கூட்டணிக்கான அடிப்படைகளாக இருக்கின்றன.

பிரெஞ்சுப் புரட்சியை விட, ஜெர்மன் புரட்சியிலும், பின்னர் அதைவிட ரசியப் புரட்சியிலும் முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவத் துடன் மேலும், மேலும் புரட்சிக்கு எதிராக சமரசமாகப் போனதன் காரணம் இதுவேயாகும். 1871 பாரீஸ் கம்யூன் நிகழ்ச்சிக்குப் பின் முதலாளி வர்க்கம் சுத்தமாக பிற்போக்கின் பின் சரணடைந்து செல்லுவதாக இருந்தது.

சில நாடுகளில் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ந்த பின், நிதி மூலதனம் பின்தங்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படத் தொடங்கிய பின் அது மேலும் கூடுதலான மக்கள் எதிர்ப்பை சந்தித்தது. காலனிய ஆதிக்கத்திற்கு எதிராக சுதேசி மக்களின் வீரமிக்க போராட்டங்களை அது எதிர்கொண்டது. எனவே அது பின்தங்கிய நாடுகளில் தனது சுரண்டல் ஆதிக்க நலன்களைக் கட்டிக்காத்துக் கொள்ள அங்குள்ள நிலப்பிரபுத்துவ மற்றும் அதற்கு முந்திய அனைத்து



வகை பிற்போக்கு சக்திகளுடனும் மக்களுக்கு எதிராக கூட்டணி அமைத்துக் கொண்டது.

இத்தகைய நாடுகள் ஏகாதிபத்திய மூலதன நுழைவுக்குப் பின்பே முதலாளித்துவத்திற்குள் நுழைந்தன. இதனால் இங்கு வளர்ந்த முதலாளித்துவம் பலவீனமானதாகவும் இருந்தது. ஒருபுறம் நிலப்பிரபுத்துவம் மற்றும் பிற்போக்கு சக்திகளின் ஒடுக்கு முறைக்கும் மற்றொருபுறம் ஏகாதிபத்திய இராணுவ மற்றும் பொருளாதார ஆக்கிரமிப்புக்கும் உட்பட்டிருந்ததால் அவற்றை எதிர்க்கும் குணத் தையும், மற்றொரு புறம் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சியதால் ஏகாதிபத்தியத்துடனும், நிலப்பிரபுத்துவத்துடனும் சமரசமாகச் செல்லும் குணாம்சத்தையும் கொண்டிருந்தது. சீனத்தில் 1911இல் தேசிய முதலாளி வர்க்கம் புரட்சிக்குத் தலைமை தாங்கிய போது அங்கு பாட்டாளி வர்க்க இயக்கம் விழிப்புற்றிருக்கவில்லை. 1927இல் அது வடக்குப் படையெடுப்பு புரட்சியில் பங்கு கொண்டு துரோகமிழைத்த போது பாட்டாளி வர்க்க இயக்கம் ஒரு சுயேச்சையான சக்தியாக வளர்ந்திருந்தது.

ரசியாவில் முதலாளி வர்க்கம், 1848, 1871 புரட்சிகளின் அனுபவத்தைக் கண்டிருப்பதோடு சொந்த நாட்டிலேயே பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியை நேரடியாகக் கண்கூடாகக் கண்டதால் அது அப்பட்டமாகவே நிலப்பிரபுத்துவத்துடன் சமரசமாக, புரட்சிக்கு எதிராக சென்றது.

எனவே நிலப்பிரபுத்துவத்தையும், மத்திய கால மீத மிச்சங்கள் அனைத்தையும் பூண்டோடு ஒழிக்கும் புரட்சியை நடத்தும் குணாம்சத்தை முதலாளி வர்க்கம் இழந்து விட்டது. இதன் பொருள் நிலப்பிரபுத் துவத்துடன் முதலாளி வர்க்கம் சமரசமாகச் சென்ற நாடுகளில் நிலப்பிரபுத்துவம் முற்றாக அல்லது அநேகமாக முற்றாக அழியாது என்றோ முதலாளித்துவம் வளராது என்றோ அர்த்தமல்ல. அவ்வாறு கருதுவது மார்க்சிய கண்ணோட்டத்திற்கு எதிரானதாகும். ஏனெனில் "தத்துவத்தின் நிலையிலிருந்து பார்த்தால் பண்ட உற்பத்தி அடிப்படையில் முதலாளிய வளர்ச்சியின் தவிர்க்க முடியாத தன்மை பற்றிய மார்க்சிய உண்மையை இக்கருத்து புறக்கணித்து விடுகிறது. பண்ட உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டும், நாகரிகமடைந்த முதலாளித்துவ நாடுகளோடு வர்த்தகத் தொடர்பு வைத்துக் கொண்டும்

படிப்பகம்

www.padippkam.com



இருக்கும் படியான ஒரு சமுதாயம் தன்னுடைய வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தவிர்க்க முடியாத முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் சென்று தீரவேண்டும் என்று மார்க்சியம் நமக்குப் போதிக்கிறது.''[10]

முதலாளி வர்க்கம் அது ஏகாதிபத்தியமாயினும், உள்நாட்டு முதலாளி வர்க்கமாயினும் நிலப்பிரபுத்துவம் மற்றும் மத்திய கால மீத மிச்சங்களை ஒரு புரட்சியின் மூலம் முற்றாக அழிக்க மறுத்து அவற்றுடன் சமரசமாகப் போவதன் மூலம் இரண்டு காரியங்களை சாதிக்க முயல்கிறது. அதாவது நிலப்பிரபுத்துவ மற்றும் பிற்போக்கு சக்திகளின் நட்பைப் பெற்றுக் கொள்வதுடன் பாட்டாளி வர்க்கம் மற்றும் புரட்சிகர மக்களின் ஜனநாயக இயக்கத்தின் துரிதமான வளர்ச்சிக்குத் தடை போடுவதற்கான சாதனத்தையும் ஏற்படுத்திக் கொள்கிறது. முழுமையான ஜனநாயகப் புரட்சியை நடத்தும் போது அது பாட்டாளி மக்களையும் ஆயுத பாணியாக்கி விடுவதால் அவ்வாயுத பாணியான மக்கள் முதலாளி வர்க்கத்தை அதே ஆயுதத்தைக் கொண்டு தாக்கி அழிக்க முடிவதற்கான வாய்ப்பு வசதிகள்ளை அது ஏற்படுத்திக் கொடுப்பதாக இருக்கிறது. எனவே முதலாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயகப் **புரட்சியை** நடத்துவதைத் தவிர்க்கிறது. மாறாக நிலப்பிரபுத்துவம் மற்றும் பிற்போக்கு சக்திகளுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு பல்வேறு சீர்திருத்தங்களின் மூலம் முன்னேற முயலுகிறது. அதாவது முதலாளித்துவப் புரட்சியால் பாட்டாளி வர்க்கம் பெறும் அனுகூலத்தைத் தவிர்க்க முயல்கிறது.

லெனின் கூறினார் :

''ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் முதலாளித்துவப் புரட்சி முதலாளி வர்க்கத்தை விட பாட்டாளி வர்க்கத்துக்கு அதிக அனுகூலமானது. முதலாளித்துவப் புரட்சி மிதமிஞ்சிய உறுதியுடன், பழங்காலத்தின் மிச்சசொச்சங்கள் அனைத்தையும் துடைத் தெறியாமல் சிலவற்றை நீடித்து வைத்திருப்பது – அதாவது, இந்தப் புரட்சி முற்றிலும் முரணற்றதாய் இல்லாமல் இருப்பது, முழுமையடையாமல் இருப்பது, உறுதியானதாய், விட்டுக் கொடுக்காததாய் இல்லாமல் இருப்பது – முதலாளி வர்க்கத்துக்கு அனுகூலமானது... முதலாளித்துவ ஜனநாயகத்தை நோக்கிப் போகும் அவசியமான மாற்றங்கள் மேலும் மெதுவாக, மேலும்



படிப்படியாக மேலும் எச்சரிக்கையாக நடப்பது, குறைந்த உறுதியுடன் நடப்பது, புரட்சி வழியே அல்லாமல் சீர்திருத்தங்கள் வழியே நடப்பது முதலாளி வர்க்கத்துக்கு அதிக அனுகூலமானது. பண்ணை அடிமை முறையின் 'நன்மதிப்பிற்குரிய' நிறுவனங்களை இந்த மாற்றங்கள் முடிந்தவரை அப்படியே விட்டு வைப்பது, இந்த மாற்றங்கள் சாதாரண மக்களின் – அதாவது, விவசாயிகளின் குறிப்பாக தொழிலாளிகளின் – சுதந்திரமான புரட்சிகரமான நடவடிக்கையையும், முன் முயற்சியையும், ஆற்றலையும் முடிந்த வரை குறைவாக வளர்ப்பவையாக இருப்பது முதலாளி வர்க்கத்துக்கு அதிக அனுகூலமானது. காரணம் பிரெஞ்சுக் காரர்கள் கூறுவதுபோல் ''துப்பாக்கியை ஒரு தோளிலிருந்து மற்றொரு தோளுக்கு மாற்றுவது'' தொழிலாளிக்கு மேலும் எளிதாய் இருக்கும் – அதாவது அவர்களுக்கு முதலாளித்துவப் புரட்சி கொடுக்கும் ஆயுதங்களையும், புரட்சி கொணர்ந்து தரும் சுதந்திரத்தையும் பண்ணையடிமை முறையை ஒழித்துச் சுத்தப்படுத்திய களத்தில் தோன்றுகின்ற ஜனநாயக நிறுவனங் களையும் முதலாளி வர்க்கத்துக்கு எதிராகத் தொழிலாளிகள் திருப்புவது மேலும் எளிதாயிருக்கும்'' [11]

முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவம் மற்றும் மத்திய கால மீத மிச்சங்களுடன் சமரசம் செய்து கொண்டு முதலாளித்துவ வளர்ச்சிக்கு சீர்திருத்தப் பாதையை மேற்கொள்வது படிப்படியாகவும், மெதுவா கவும் முயல்வது பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் கடும் துன்பந் தருவதாகவும் வேதனைக்குரியதாகவும் இருக்கிறது. இப் பாதையினால் முதலாளித்துவம் வளர்வதும் நிலப்பிரபுத்துவமும் பிற்போக்கும் படிப்படியாக அழிவதும் உண்மையே எனினும் அது நீண்டகால நிகழ்ச்சிப் போக்கைக் கொண்டதாய் இருக்கிறது. அதாவது உறுதியான கலப்பற்ற முதலாளித்துவ உறவுகள் பிரமாண்டமான அளவுக்கு நிலப்பிரபுத்துவ உறவுகளால் மூழ்கடிக்கப்பட்டிருப்பது நீண்ட காலத்திற்குத் தொடர்கிறது. இதனால் சமுதாயம் ஒரு அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாக நீண்ட காலத்திற்கு நீடிக்கிறது. இத்தகைய நிலை ரசியாவில் நீடித்த போது லெனின் எழுதினார் :

''ரசியா போன்ற நாடுகளில் முதலாளித்துவத்தால் தொழிலாளி வர்க்கம் துன்பப்படுவதை விட முற்றுப் பெறாத முதலாளித்துவ வளர்ச்சியிலேதான் அதிகமாகத் துன்பப் படுகிறது. எனவே, மிகமிக

படிப்பகம்

www.padippkam.com



விரிவான, சுதந்திரமான, விரைவான முதலாளித்துவ வளர்ச்சியிலே தொழிலாளி வர்க்கம் மிகமிக நிச்சயமாக அக்கறை கொண்டிருக்கிறது. முதலாளித்துவத்தின் விரிவான, சுதந்திரமான, விரைவான வளர்ச்சியைத் தடங்கல் செய்யும் பழைய அமைப்பு முறையின் மிச்சசொச்சங்கள் அனைத்தையும் அகற்றி விடுவது தொழிலாளி வர்க்கத்துக்கு மிகவும் அனுகூல மானது ஆகும்.''

''முதலாளித்துவப் புரட்சி என்பது பழங் காலத்தின் மீத மிச்சங்களை, பண்ணையடிமைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் அமைப்பு முறையின் மீத மிச்சங்களை மிகவும் உறுதியாகத் துடைத்தெறிந்துவிட்டு முதலாளித்துவத்தின் மிகவும் விரிவான, சுதந்திரமான, விரைவான வளர்ச்சிக்கு மிக முழுமையாக உத்திரவாதம் செய்கிற புரட்சி எழுச்சியாகும். எனவேதான் முதலாளித்துவப் புரட்சி பாட்டாளி வர்க்கத்துக்கு மிக உயர்ந்த அளவிலே அனுகூலமானதாகும். பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு முதலாளித்துவப் புரட்சி முற்றிலும் அவசியமாகும். எவ்வளவுக்கெவ்வளவு முழுமையாகவும் உறுதியானதாகவும் முரணற்றதாகவும் முதலாளித்துவப் புரட்சி இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை எதிர்த்தும் சோசலிசத்திற்காகவும் நடத்தும் போராட்டம் மிகவும் உறுதிப்படுத்தப் பட்டதாய் இருக்கும்''[12] முரணற்ற முதலாளித்துவப் புரட்சியால் பாட்டாளி மக்களுக்குக் கிடைக்கும் ''அரசியல் உரிமை (Political Liberty) உழைப்பாளி மக்களை வறுமையிலிருந்து விடுவிக்காது. ஆனால் அது வறுமையோடு போராடுவதற்கு தொழிலாளிகளுக்கு ஒரு ஆயுதத்தைத் தரும். வறுமையை எதிர்த்துப் போராட தொழிலாளர்கள் தாமே ஒன்று சேர்வதைத் தவிர வேறு வழியில்லை; வேறு வழி இருக்கவும் முடியாது. அரசியல் உரிமை இல்லாவிட்டால் கோரிக்கைகளுக்காக மக்கள் ஒன்று சேர்வதற்கு வாய்ப்பில்லை.''[13]

எனவே முதலாளித்துவப் புரட்சி முதலாளி வர்க்கத்தைவிட பாட்டாளி வர்க்கத்துக்கு இரண்டு காரணங்களுக்காக அவசியம் தேவைப்படுகிறது. 1. முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ மற்றும் மத்திய கால மீத மிச்சங்களுடன் சமரசம் செய்து கொண்டு முதலாளித்துவ வளர்ச்சியை சீர்திருத்தங்களின் வழியே சாதிக்கும் முயற்சிகளால் நீண்ட



நெடிய காலத்துக்கு அரை நிலப்பிரபுத்துவ உறவுகளால் பாட்டாளி வர்க்கம் படும் துயரிலிருந்து உடனடியாக விடுதலை பெறவும், 2. சோசலிசத்தைச் சாதிப்பதற்கு ஜனநாயக உரிமையையும், அரசியல் உரிமையையும் பாட்டாளி வர்க்கம் பெறுவதற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கு முரணற்ற வகையில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி அவசியப்படுகிறது. ''முதலாளித்துவ சுதந்திரம், முதலாளித்துவ முன்னேற்றம் எனும் பாதையைத் தவிர பாட்டாளி வர்க்கத்தின் விவசாயி மக்களின் உண்மையான சுதந்திரத்திற்கு வேறு பாதை கிடையாது; இருக்கவும் முடியாது என்பதை மார்க்சியவாதிகளாகிய நாம் அறிய வேண்டும். சோசலிசத்தை மேலும் நெருங்கி வரச் செய்வதற்கு முழுமையான அரசியல் உரிமை தவிர, ஒரு ஜனநாயகக் குடியரசு தவிர பாட்டாளி வர்க்கத்தின் விவசாயி மக்களின் புரட்சிகரமான ஜனநாயக சுதந்திரம் தவிர வேறெந்த சாதனமும் தற்காலத்தில் கிடையாது; இருக்கவும் முடியாது என்பதை நாம் மறக்கக் கூடாது.''[14] முதலாளிய வர்க்கத்தால் இது சாத்தியமாகாத நிலையில் பாட்டாளி வர்க்கமே முதலாளித்துவப் புரட்சியை நடத்துவதைத் தவிர வேறு வழி இல்லை.

லெனின் கூறினார் :

''முதலாளித்துவ ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் அவசியமான மாறுதல்கள் சீர்திருத்தங்கள் வழியே அல்லாமல் புரட்சி வழியே நிகழ்வது தொழிலாளி வர்க்கத்துக்கு அதிக அனுகூலமானதாகும். சீர்திருத்தத்தின் மூலமான வழி என்பது தள்ளிப் போகும் வழி, தாமதப் படுத்தும் வழி, நாட்டின் உடம்பின் மீதுள்ள அழுகிப் போன மிக அதிக வேதனை மிக்க நிதானத் துடன் இற்றுச் சிதையும் வழியாகும். பாட்டாளி வர்க்கமும் விவசாயிகளும் தான் அதிக அழுகலினால் மிகுதியாகவும், முதன்மையாகவும் துன்பப்படுகிறார்கள். புரட்சி வழி என்பது விரைவாக வெட்டி அகற்றும் வழி, பாட்டாளி வர்க்கத்திற்கு குறைவான வலி கொடுக்கும் வழி, அழுகிவிட்டதை உடனடியாக அகற்றும் வழி, முடியரசினிடமும் அதைச் சேர்ந்த வெறுக்கத் தக்க, இழிந்த, அழுகலான நாற்றமெடுக்கும் நிறுவனங்களிடமும் மிகக் குறைவான இணக்கமும் எச்சரிக்கையும் காட்டும் வழியாகும்.''[15]

படிப்பகம்

www.padippkam.com



எனவே முதலாளித்துவத்தை நோக்கிச் செல்லும் அவசியமான மாறுதல்களுக்காக ரசிய பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் சீர்திருத்த வழிகளை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக புரட்சி வழியை தேர்ந்தெடுத்து மேற்கொண்டது. முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்க இயக்கத்தைக் கண்டு அஞ்சி சீர்திருத்த வழிகளையே மேற்கொண்டதால் நிலப்பிரபுத்துவத்தையும் மத்திய கால அனைத்து மீதமிச்சங்களையும் புரட்சி வழியில் முற்றாக ஒழித்துக்கட்டும் பணி பாட்டாளி வர்க்கத்தின் தலையில் வரலாற்று வகையில் தவிர்க்க முடியாமல் சுமத்தப்பட்டது.

முதலாளித்துவம் முழுவதையும் ஒழித்துக் கட்டி சோசலிசத்தையும் பின்னர் கம்யூனிசத்தையும் நிறுவுவதுதான் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் நோக்கம் (திட்டம்). ஆனால் இருக்கும் நிலப்பிரபுத்துவத்தையும் மத்திய கால மீத மிச்சங்களையும் முற்றாகத் தூக்கி எறிந்து முதலாளித்துவத்தின் முழுமையான, சுதந்திரமான, விரைவான வளர்ச்சிக்கு வழி செய்யாமல் சோசலிசத்தை நோக்கி பாட்டாளி வர்க்கம் முன்னேற முடியாது என்பதால் முதலாளித்துவத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் நிலப்பிரபுத்துவம் மற்றும் மத்திய கால மீத மிச்சங்களை முற்றாகத் துடைத்தெறியும் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதை தனது குறைந்த பட்சத் திட்டமாக பாட்டாளி வர்க்க இயக்கம் ஏற்றுக் கொண்டது.

ஸ்டாலின் கூறினார் :

"திட்டம் என்பது முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டம் முழுவதையும் உள்ளடக்கியதாகவும், முதலாளித்துவத்தைத் தூக்கி எறிந்து சோசலிசத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டும் வடிவமைக்கப் படலாம். அல்லது முதலாளித்துவ வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட இடைக் கட்டத்தை மட்டும் கணக்கில் கொண்டும் வடிவமைக்கப் படலாம். உதாரணமாக நிலப்பிரபுத்துவ எதேச்சதிகாரத்தின் மிச்சசொச்சங்களை தூக்கி எறிந்து முதலாளித்துவத்தின் சுதந்திரமான வளர்ச்சிக்கான நிலைமையை உருவாக்குவதாக இருக்கலாம். இதற்கேற்ப திட்டம் குறைந்த பட்சத் திட்டம், அதிக பட்சத் திட்டம் என்ற இரு பகுதிகளைக் கொண்டதாய் இருக்கும்." [16]

ரசியாவில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் (1861 மற்றும் ஸ்டாலிபின் சீர்திருத்த சட்டங்கள் போன்றவை மூலம்)



முதலாளித்துவம் உறுதியாக வளர்ந்து வந்த போதிலும் முதலாளித்துவத்தின் சுதந்திரமான விரிவான விரைவான வளர்ச்சிக்குத் தடையாய் இருந்த ஜார் எதேச்சதிகாரத்தையும் நிலப்பிரபுத்துவத்தின் அனைத்து மீத மிச்சங்களையும் தூக்கி எறியும் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதை போல்ஷ்விக் கட்சி தனது குறைந்த பட்சத் திட்டமாகவும் முதலாளித்துவம் முழுவதையும் தூக்கி எறிந்து சோசலிசத்தையும் பின்னர் கம்யூனிசத்தையும் நிறுவுவதை தனது அதிக பட்சத் திட்டமாகவும் கொண்டிருந்தது.

சீனத்தில் சுதந்திரமான தேசிய முதலாளிய வளர்ச்சிக்குத் தடையாய் நிலப்பிரபுத்துவம் மட்டுமின்றி ஏகாதிபத்தியமும் அதிகார வர்க்க தரகு முதலாளித்துவமும் இருந்தன. எனவே அவற்றை தூக்கி எறிவதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தனது குறைந்த பட்சத் திட்டமாகவும், முதலாளித்துவம் முழுவதையும் ஒழித்து சோசலிசத்தையும் பின்னர் கம்யூனிசத்தையும் நிறுவுவதை தனது அதிக பட்சத் திட்டமாகவும் கொண்டிருந்தது.[17]

மாவோ கூறினார்:

"சீனப் புரட்சியின் போக்குகள் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்படல் வேண்டும். முதல் கட்டம் காலனிய, அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ தன்மை கொண்ட சமூகத்தை ஒரு சுயேச்சையான ஜனநாயகச் சமூகமாக மாற்ற வேண்டியதாகும். இரண்டாவது கட்டத்தில் சோசலிச சமுதாயத்தை உருவாக்க புரட்சியை முன்னோக்கித் தள்ள வேண்டியதாகும்... முதல் கட்டம் தனது சமூகக் குணாம்சத்தின் அடிப்படையில் இன்னமும் முதலாளிய ஜனநாயகத் தன்மைகளையே கொண்டிருக்கிறது. அப்புரட்சியின் முதல் கட்டத்தில் ஸ்தூலமான திட்டவட்டமான தேவைகள் முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் பாதையில் உள்ள தடைக்கற்களை அகற்றுவதாகவே உள்ளது." [18]

முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை பாட்டாளி வர்க்க இயக்கம் தனது குறைந்தபட்சத் திட்டமாக ஏற்றுக் கொண்டது என்பதற்குப் பொருள் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை பாட்டாளி வர்க்கம் தலைமையேற்று நடத்தியது என்பதாகும்.

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்பதற்குப் பொருள் நாடு எந்த வழியில்

படிப்பகம்

www.padippkam.com



முன்னேறுவது முதலாளித்துவப் பாதையிலா சோசலிசப் பாதையிலா என்ற கேள்விக்கு சோசலிசப் பாதையில் என்று பதில் தருவதாகும். அதன் பொருளும் முக்கியத்துவமும் என்ன என்பதை இருபெரும் புரட்சிகளிலிருந்தும் தொகுத்தறிய முடியும்.

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்பதற்குப் பொருள்,

**முதலாவதாக,** முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்கு முதலாளி வர்க்கத் தலைமையை அனுமதிக்கக்கூடாது, அதாவது சீர்திருத்த வழியை ஆதரிக்கக்கூடாது, மாறாக புரட்சி வழியை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

முதலாளி வர்க்கம் அதன் வர்க்க இயல்பு காரணமாக ஜனநாயகப் புரட்சியில் ஒரு முரண்பாடான நிலையில் இருக்கிறது. தனது வளர்ச்சிக்கும் ஆதிக்கத்திற்கும் நிலப்பிரபுத்துவத்தையும் அனைத்து மத்தியகால மீதமிச்சங்களையும் ஒழிக்கவேண்டிய அவசியத்தில் இருக்கிறது. அதே நேரத்தில், தன்னுடன் கூடவே பிறந்து வளர்ந்து வரும் பாட்டாளி வர்க்கத்தையும், பாட்டாளி வர்க்க இயக்கத்தையும் கண்டு அஞ்சுகிறது. நிலப்பிரபுத்துவத்தையும் மத்தியகால மீதமிச்சங்களையும் ஒழித்துக்கட்டும் ஜனநாயகப் புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்கம் அரசியல் உரிமையையும், ஜனநாயகத்தையும் பெறுவது முதலாளி வர்க்கத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தை விரிந்ததாகவும், தீவிரமாகவும் மாற்றுவதைக் கண்டு முதலாளி வர்க்கம் அஞ்சுகிறது. எனவே நிலப்பிரபுத்துவத்தையும் அனைத்து மத்தியகால மீதமிச்சங்களையும் புரட்சி வழியில் அல்லாமல் சீர்திருத்தங்களின் வழியே மாற்றியமைக்கும் பாதையை மேற்கொள்கிறது. முதலாளி வர்க்கத்தின் சீர்திருத்தங்கள் வழியே பழமையும் பிற்போக்கும் அழிவதற்காக பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை ஆதரித்து நிற்பதே முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் முதலாளி வர்க்கத்தின் தலைமை என்பதாகும். மாறாக முதலாளி வர்க்க சீர்திருத்தத்தை ஆதரிக்காமல் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதுதான் பாட்டாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்கு தலைமை அளிப்பது என்பதாகும்.

முரணற்ற ஜனநாயகத்தைக் கண்டு முதலாளி வர்க்கம் அஞ்சுகிறது. ஆனால் பாட்டாளி வர்க்கத்திற்கு அது அவசியமாக



உள்ளது. முதலாளி வர்க்கத்தைப் போல் இழப்பதற்கு சுரண்டல் நலன் எதுவும் பாட்டாளி வர்க்கத்துக்கு இல்லை என்பதால் ஜனநாயகத்தைக் கண்டு பாட்டாளி வர்க்கத்துக்கு அச்சமில்லை. ஆனால் பெறுவதற்கு அதற்கு ஒரு உலகமே இருப்பதால் ஜனநாயகத்தை வரவேற்கிறது பாட்டாளி வர்க்கம். எவ்வளவுக்கெவ்வளவு முரணின்றி முழுமையாக முதலாளித்துவப் புரட்சி இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அப் புரட்சி முதலாளிகளைவிட பாட்டாளிகளுக்குச் சாதகமாய் இருப்பது இதனால்தான். எனவே முரணற்ற, முழுமையான ஜனநாயகத் திற்காகப் போராடும் திறன் முதலாளி வர்க்கத்துக்கு இல்லை; பாட்டாளி வர்க்கத்துக்கு மட்டுமே உள்ளது. நிலப்பிரபுத்துவத்துடனும் மற்றும் அனைத்து மத்தியகால மீதமிச்சங்களுடனும் எவ்வித சமரசமும் இன்றி பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே போராட முடியும்; அந்த அவசியமும் பாட்டாளி வர்க்கத்துக்கு இருக்கிறது. எனவேதான் லெனின் கூறினார் : "முதலாளித்துவப் புரட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கம் விலகி நிற்கக் கூடாது. அதன்பால் அசிரத்தையாய் இருக்கக் கூடாது. புரட்சியின் தலைமையை முதலாளி வர்க்கம் எடுத்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. அதற்கு மாறாக புரட்சியை சாதித்து முடிவுக்குக் கொண்டுவர அதில் தானே சக்திமிக்க பங்காற்ற வேண்டும். முரணற்ற பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்காக மிகுந்த உறுதியுடன் போராடவேண்டும் என்று மார்க்சியம் போதிக்கிறது." [19]

மேலும் அவர் தெளிவாகச் சொன்னார் :

"முதலாளித்துவ சுதந்திரம், முதலாளித்துவ முன்னேற்றம் எனும் பாதையைத் தவிர பாட்டாளி வர்க்கத்தின், விவசாயி மக்களின் உண்மையான சுதந்திரத்திற்கு வேறு பாதை கிடையாது; இருக்கவும் முடியாது என்பதை மார்க்சியவாதிகளாகிய நாம் அறிய வேண்டும். சோசலிசத்தை மேலும் நெருங்கிவரச் செய்வதற்கு முழுமையான அரசியல் உரிமை தவிர, ஒரு ஜனநாயகக் குடியரசு தவிர, பாட்டாளி வர்க்கத்தின், விவசாயி மக்களின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம் தவிர வேறெந்த சாதனமும் தற்காலத்தில் கிடையாது. இருக்கவும் முடியாது என்பதை நாம் மறக்கக்கூடாது. முன்னேறிய, புரட்சிகரமான எந்தவித வில்லங்கமும் அய்யமும் இல்லாத பின்னோக்கிப் பார்க்காத புரட்சிகரமான – ஒரே வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்ற

படிப்பகம்

www.padippkam.com



முறையில் ஜனநாயகப் புரட்சியின் பணிகளை முடிந்த வரை விரிவாகவும் தைரியமாகவும் உச்ச பட்சமான முன் முயற்சியுடனும் மக்கள் அனைவருக்கும் முன்வைக்க வேண்டும். இந்தப் பணிகளை இழித்துப் பேசுவது தத்துவார்த்த வகையில் மார்க்சியத்தைக் கொச்சையாக்குவதாகவே அர்த்தம்; குறுகிய குட்டிமுதலாளிய பாணியில் உருக் குலைப்பதாகவே அர்த்தம்; நடைமுறை அரசியலில் பார்க்கும் போது புரட்சி இலட்சியத்தை முதலாளி வர்க்கத்தின் கையில் கொடுப்பதாகத்தான் அர்த்தம் – அந்த வர்க்கம் புரட்சியை முரணின்றி நிறைவேற்றி வைக்கும் பணியிலிருந்து தவிர்க்க முடியாத்படி பின்வாங்கும்." [20] ஆனால் "பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் நம்பிக்கையுடன் முடிவு வரை செல்லத் திறமை வாய்ந்தது. ஏனெனில் அது ஜனநாயகப் புரட்சிக்கு அப்பால் வெகு தொலைவுக்குச் செல்கிறது. எனவேதான் பாட்டாளி வர்க்கம் குடியரசுக்காகப் போராடுவதில் முன்னணியில் நிற்கிறது."

சீன முதலாளி வர்க்கத்தின் இரட்டை குணாம்சங்களையும் – ஒரு புறம் புரட்சிகர குணாம்சம் மறுபுறம் சமரச குணாம்சம் – அதன் பலவீனத்தையும் சுட்டிக் காட்டிய மாவோ ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கி எறியும் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றும் கடமை பாட்டாளி வர்க்கத்தின் தோள்களில் ஏற்றப் பட்டிருந்தது பற்றிக் கூறினார்.[21]

மாவோ கூறினார் :

"சீன முதலாளி வர்க்கம் ஒரு காலனிய அரைக்காலனிய நாட்டைச் சேர்ந்த முதலாளி வர்க்கமாயிருப்பதால் அரசியல் வகையிலும் அது மிகவும் பலவீனமாயுள்ளதுடன், புரட்சியின் எதிரிகளுடன் சமரசவாதப் போக்கைக் கைக்கொள்வதாகவும் உள்ளது, சீன முதலாளி வர்க்கம் புரட்சியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் போதே ஏகாதிபத்தியத்துடன் உறவுகளை முழுமையாகத் துண்டித்துக் கொள்ள விரும்பவில்லை. மேலும் அது கிராமப்புற நிலப்பிரபுத்துவத்துச் சுரண்டல் முறையோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. எனவே, ஏகாதிபத்தியத் தையும் நிலப்பிரபுத்துவத்தையும் முழுமையாக ஒழித்துக் கட்டவும் அதற்கு சக்தியில்லை. இவ்வாறு சீன முதலாளி ஜனநாயகப் புரட்சியின் இவ்விரு அடிப்படை பிரச்சினைகளும் அல்லது கடமைகளும் எந்த விதத்திலும் தேசிய முதலாளிகளால் நிறைவேற்றப்படப் போவதில்லை. எனவே பாட்டாளி வர்க்கத்தின் தோள்களில் தவிர்க்க இயலாதவாறு இப்பொறுப்பு ஏற்றப் பட்டுள்ளது."[22]



எனவே பாட்டாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமை தாங்குவதற்கு அர்த்தம், முதலாவதாக, முதலாளித் துவத்தின் சுதந்திரமான, விரைவான, விரிவான வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும் பிற்போக்கு சக்திகளுடன் முதலாளி வர்க்கம் சமரசமாகப் போவதால் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்கு பாட்டாளி வர்க்கம் தலைமையேற்று அவற்றை பூண்டோடு ஒழித்துக் கட்ட வேண்டும் ; அவ்வாறின்றி, முதலாளித்துவ வர்க்கம், நிலப்பிரபுத்துவம் மற்றும் பிற்போக்கு சக்திகளுடன் சமரச, சீர்திருத்தப் பாதையை மேற்கொள்வதை பாட்டாளி வர்க்கம் ஆதரிக்கக் கூடாது என்பதாகும்.

**இரண்டாவதாக,** பாட்டாளி வர்க்கம் விவசாய வர்க்கத்துடன் உறுதியான கூட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நடத்துவதில் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தைச் சார்ந்திருப்பதில்லை. ஏனெனில் அது 'தன்னலமுள்ளதாய்' 'பேடித்தனமுள்ளதாய்' 'முரண்பாடுள்ளதாய்' இருக்கிறது. அதன் குறுகிய நலன்கள் கைகூடியவுடன் புரட்சியி லிருந்து பின்வாங்கி எதிர்ப் புரட்சியுடன் சேர்ந்து கொண்டு புரட்சிக்கும் மக்களுக்கும் எதிராகத் திரும்புகிறது. ஜெர்மன் புரட்சியிலும், ரசியப் புரட்சியிலும், சீனத்தின் வடக்குப் படையெடுப்பிலும் இதுதான் நிகழ்ந்தது. எனவே பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நடத்துவதற்கு விவசாயிகளையே உறுதியாக சார்ந்திருக்க வேண்டும். விவசாயிகளும், சிறு முதலாளி வர்க்கமே எனினும் முதலாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் வேறுபாடு உள்ளது.

முதலாளிகளைப் போலன்றி விவசாயிகள் தனிச் சொத்துடைமையின் முதன்மையான வடிவங்களில் ஒன்றான நிலப்பிரபுத்துவ பண்ணைகளைப் பறிமுதல் செய்வதில் அதிகமாக அக்கறை கொண்டுள்ளனர். அதன் பின் சோசலிஸ்ட் ஆகாமலும், சிறு முதலாளிய வர்க்கத் தன்மையை இழக்காமலும் இருப்பினும் ஜனநாயகப் புரட்சியின் ஒரு முழுமையான தீவிரமான ஆதரவாளராக ஆகும் திறம் கொண்டுள்ளனர். முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ

www.padippkam.com



வர்க்கத்துடன் செய்து கொள்ளும் சமரசத்தால் நிலச் சீர்திருத்தத்தை முழுமையாக செய்வதில்லை. ஆனால் பாட்டாளி வர்க்கம் சமரசமின்றி நிலச் சீர்திருத்தத்தை முன் வைப்பதால் விவசாயிகள் விரும்புவது, கனவு காண்பது, தேவையானது அனைத்தும் நிலச் சீர்திருத்தத் துறையில் நிறைவேற்றப்பட முடியும். மேலும் இதனால் பண்டப் பொருள் உற்பத்தி முறைக்குள் முடிந்த அளவுக்கு அவர்கள் தமது வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள முடியும் என்பதால் அரை நிலப்பிரபுத்துவம் என்ற சேற்றுக் குழியிலிருந்து, ஒடுக்கு முறையிலிருந்து அவர்கள், உடனடியாக வெளியேற முடியும்; அவர்கள் விரும்புவது இதுவே.

மேலும் தீவிரமான நிலச் சீர்திருத்தம் மட்டுமல்ல, தங்களுடைய பொதுவான, நிரந்தரமான நலன்களுக்காக பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்து அவர்கள் போராடுவதற்கு விவசாயிகளுக்கு முழு ஜனநாயகம் தேவையாகும். ஏனெனில் ஜனநாயக அமைப்பு ஒன்றுதான் விவசாய மக்களின் நலன்களை சரி நுட்பமாக வெளியிடவும் பெரும்பான்மை மக்கள் என்ற வகையில் விவசாயி மக்களின் தலைமையை உறுதிப் படுத்தவும் முடியும். எனவே மேலும் மேலும் அது அதிகமான ஜனநாயகத்திற்காக நிற்கும் வர்க்கமாக இருக்கிறது. முதலாளி வர்க்கத்தைப் போல் ஜனநாயகத்தைக் கண்டு விவசாயிகள் அஞ்சுவதில்லை. மாறாக ஜனநாயகம் விவசாயிகளுக்கு தமது நலனைக் காப்பதற்கான, ஒப்பற்ற கருவியாக இருக்கிறது. எனவேதான் ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ பிற்போக்கு சக்திகளுடன் சேர்கிற போது விவசாயிகள் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் வரும் தன்மை பெற்றுள்ளனர்.

எனவே பாட்டாளிகள் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமையேற்பது என்பதற்குப் பொருள் முதலாளி வர்க்கத்துடன் இணைந்து ஜனநாயகப் புரட்சியை நடத்துவது என்பதல்ல; முதலாளி வர்க்கம் துரோகத்தனமானதும், பேடித்தனமானதும் எதிர்ப் புரட்சி குணாம்சம் கொண்டதுமாய் இருக்கிறது. எனவே முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்கு அதைச் சார்ந்திருப்பது என்பது புரட்சிக்கு துரோக மிழைப்பது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. மாறாக விவசாயிகளைச் சார்ந்திருப்பதன் மூலமே ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியும். பாட்டாளி வர்க்கத்தின் தலைமையைக் கண்டு முதலாளிகள் பின்வாங்கினால் அது தீய விசயமல்ல.



உண்மையில் முதலாளிய வர்க்கம் பின்வாங்கும் போதுதான்— விவசாயிகள் திரள் திரளாக பாட்டாளி வர்க்கத்துடன் தோளோடு தோள் நின்று தீவிரமான புரட்சியாளர்களாக வெளிக் கிளம்பும் போதுதான் ஜனநாயகப் புரட்சி தன்னுடைய உண்மையான வீச்சைக் காண முடியும். எனவே தான் ரசிய முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் லெனின் கூறினார் :

> "பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் ஜனநாயகத்துக்கு முரணின்றி போராடும் போராளியாக இருக்க முடியும். அதன் புரட்சிப் போராட்டத்தில் திரளான விவசாய மக்கள் கலந்து கொண்டால்தான் அது ஜனநாயகத்துக்கு வெற்றிகரமாகப் போராடும் போராளியாக முடியும்." [23]

எனவேதான் சீனப் புரட்சியில் மாவோவும் கீழ்க்கண்டபடி குறிப்பிட்டார் :

> "பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ்தான் ஏழை விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் தங்கள் விடுதலையைச் சாதிக்க முடியும். ஏழை விவசாயிகளுடனும் நடுத்தர விவசாயிகளுடனும் ஓர் உறுதியான கூட்டை உருவாக்கிக் கொள்வதால் மட்டுமே பாட்டாளி வர்க்கம் புரட்சியை வெற்றிக்கு வழி நடத்திச் செல்ல முடியும்." [24]

எனவே பாட்டாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமை தாங்குவது என்பதன் பொருள் சுதந்திரமான, விரிவான, விரைவான முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் நிலப்பிரபுத்துவம் மற்றும் அனைத்து பிற்போக்கு சக்திகளையும் துடைத்தெறியும் புரட்சிகர எழுச்சிக்கு அது பிரதானமாக முதலாளி வர்க்கத்துடன் அல்ல, விவசாயிகளுடன் உறுதியான ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்கிறது என்பதாகும்.

**மூன்றாவதாக,** முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கம் தலைமை ஏற்பது என்பதற்கு அர்த்தம் முதலாளிய ஜனநாயகக் குடியரசை ஏற்படுத்துவது என்பதல்ல. மாறாக, தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் புரட்சிகர மக்களின் ஜனநாயக சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவது என்பதேயாகும். அந்த அரசாங்கம் முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசின் வடிவமைப்பு பெற்றிருக்கும் என்பதல்ல, மாறாக புதிய ஜனநாயகக் குடியரசின் வடிவம் பெற்றிருக்கும் என்பதாகும்.

படிப்பகம்

www.padippkam.com



பாட்டாளி வர்க்கம் தலைமையை ஏற்று நடத்துவது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்பதால் ஆட்சி அதிகாரத்தில் முதலாளி வர்க்கம் அமரும் என்று கருதுவது தவறாகும். பிற்போக்கு **சக்திகளை** – நிலப்பிரபுத்துவம் மற்றும் மத்தியகால மிச்சசொச்சங்களை – எதிர்த்து முரணற்ற சுதந்திரத்திற்கும், முரணற்ற ஜனநாயகத்திற்கும் பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுடன் இணைந்து புரட்சி நடத்துவதால் அமையும் அரசு தொழிலாளிகள், விவசாயிகளின் (பிற குட்டி முதலாளிகள் உட்பட) ஜனநாயக சர்வாதிகாரமாகவே இருக்கும்.

ரசியாவில் ஜாராட்சியை வீழ்த்திவிட்டு ஜனநாயகப் புரட்சி நிர்ணயமான வெற்றிபெற அமையவேண்டிய ஆட்சி பற்றி லெனின் கூறுகிறார் :

"ஜாராட்சி மீது நிர்ணயமான வெற்றியைச் சாதிக்கவல்ல ஒரே சக்தி **மக்களே** – அதாவது முக்கியமான பெரிய சக்திகளாக எடுத்துக்கொண்டால் பாட்டாளி வர்க்கமும் விவசாயி மக்களும் ஆவர். இவற்றுக்கு இடையே கிராமத்தையும் நகரத்தையும் சேர்ந்த சிறு முதலாளி வர்க்கத்தினரை (இவர்களும் 'மக்களின்' ஒரு பகுதியினர் தான்) வைக்க வேண்டும். "ஜாராட்சி மீது புரட்சி நிர்ணயமான வெற்றி பெறுவது" என்பதற்குப் பொருள் பாட்டாளி வர்க்கம், விவசாயி மக்கள் ஆகியோரின் புரட்சிகர மான ஜனநாயக சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதாகும்." [25]

அதே நேரத்தில் அவர் முதலாளிகள் வர்க்கத்தைப் பற்றியும் கூறுகிறார் :

"பெருமுதலாளி வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள், தொழிற் சாலை சொந்தக்காரர்கள் அவர்களுடைய வர்க்க நிலையின் காரணமாக அவர்கள் ஜாராட்சியை எதிர்த்து நிர்ணயமான போராட்டம் நடத்தும் திறமற்றவர்கள் என்பதை நாம் அறிவோம். அவர்கள் தனிச் சொத்துடைமையால், மூலதனத்தால், நிலவுடைமையால் மிதமிஞ்சிய அளவில் பலமாக விலங்கிடப் பட்டிருப்பவர்கள். எனவே அவர்கள் நிர்ணயமான போராட்டத்தில் இறங்கமுடியாது. பாட்டாளி வர்க்கத்துக்கும், விவசாயி மக்களுக்கும் எதிராக பயன்படுத்துவதற்கு அதிகார வர்க்க– போலீஸ், இராணுவ சக்திகளை வைத்துக் கொண்டுள்ள ஜாராட்சி அவர்களுக்கு மிகவும் தேவை. எனவே அதை அழிப்பதில் அவர்களுக்கு விருப்பமில்லை." [26]



சீனப்புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமையில் நடந்த முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் ஆட்சிக்கு வரும் வர்க்கங்கள் பற்றி மாவோ கூறுகிறார் :

"சீனாவின் பாட்டாளி வர்க்கம், விவசாயிகள் , அறிவாளிகள் மற்றும் இதர குட்டி முதலாளிய பகுதியினர் ஆகியவர்களே தேசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் மூலாதாரமான சக்திகளாகும். இவ்வர்க்கங்கள் யாவும் தவிர்க்க இயலாதபடி, சீன ஜனநாயகக் குடியரசில் நிர்மாணிக்கப்படப் போகும் அரசிலும் அரசாங்கத்திலும் பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் மூலாதாரமான பகுதிகளாக விளங்கும். நாம் இப்போது உருவாக்க விரும்பும் சீன ஜனநாயகக் குடியரசானது பாட்டாளி வர்க்கத்தின் தலைமையினால் வழிநடத்திச் செல்லப்படும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சக்திகளின் கூட்டு சர்வாதிகாரத்தின் கீழ் அமையவிருக்கும் அரசாகும்." [27]

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் ரசிய முதலாளிகளிடமிருந்து சீன முதலாளிகள் வேறுபடுவது பற்றி மாவோ கூறுகிறார் :

" வேறு நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நிலப் பிரபுத்துவ இராணுவ ஏகாதிபத்திய நாடாக ஜாரிச ரசியா இருந்ததால் ரசியாவின் அன்றைய முதலாளிகளிடம் புரட்சிகர உணர்வு முற்றிலும் இல்லை. எனவே ரசியாவில் பாட்டாளி வர்க்கத்தின் கடமை முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதே அன்றி அதனுடன் ஒன்று சேர்வதில்லை என்பதாகும். ஆனால் காலனிய, அரைக்காலனிய நாடான சீனாவில் – இதர ஏகாதிபத்திய சக்திகளால் ஒடுக்கப்படும் நாடான சீனாவில் – முதலாளி வர்க்கம் குறிப்பிட்ட கட்டங்களில் குறிப்பிட்ட அளவுக்கு புரட்சிகரத் தன்மை கொண்டிருக்கிறது. எனவே சீனாவில் தேசிய முதலாளிகளின் புரட்சிகரத் தன்மையைப் புறக்கணிக்காமல் ஏகாதிபத்தியம், அதிகார வர்க்கம், யுத்தப் பிரபுக்கள் ஆகியோர் கொண்ட அரசாங்கங்களுக்கு எதிராக தேசிய முதலாளிகளையும் உள்ளடக்கிய அய்க்கிய முன்னணியைக் கட்டுவதுதான் பாட்டாளி வர்க்கக் கடமையாக இருக்கிறது." [28]

இரசிய, சீன முதலாளிய ஜனநாயகப் புரட்சிகளில் முதலாளி வர்க்கங்களுடனான உறவு வேறுபட்டிருப்பினும் இரு புரட்சிகளிலும்

படிப்பகம்

www.padippkam.com



முதலாளி வர்க்கம் ஒரு அடிப்படை வர்க்கமாக எடுத்துக் கொள்ளப் படவில்லை என்பது கவனத்திற்குரியதாகும். மாறாக இரண்டு புரட்சிகளிலுமே தொழிலாளிகளையும் விவசாயிகளையும் பிற குட்டி முதலாளிய வர்க்கங்களையுமே பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் அடிப்படை ஆளும் வர்க்கங்களாக லெனினும், மாவோவும் குறிப்பிடுகின்றனர்.

பிளக்ஹானவும் மென்ஷ்விக்குகளும் ரசிய முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் முதலாளிவர்க்கத் தலைமையை வலியுறுத்தினர். முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் முதலாளி வர்க்கம் இல்லை யென்றால் புரட்சி தோல்வியுறும் என்று வாதிட்டனர். அவர்களை மறுத்து லெனின் கூறினார்:

> ''இரசியப் புரட்சியில் நமது முதலாளிய வர்க்கத்தின் எதிர்ப் புரட்சி குணாம்சத்தைப் புரிந்து கொள்ளத் தவறுகின்ற, எந்த வர்க்கங்கள் ரசியப் புரட்சியை முழு வெற்றியடையச் செய்யும் என்பதை தெளிவாகத் தீர்மானிக்கத் தவறுகின்ற, இந்த சமூக ஜனநாயகவாதப் பிரிவினர், முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை ஆதரிக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் விழுந்து விடுகிறார்கள். முதலாளிய புரட்சியில் முதலாளி வர்க்கமே பிரதான சக்தி என்றும், அதிலிருந்து முதலாளி வர்க்கம் விலகினால் புரட்சி பலவீன மடையும் என்றும் இன்னும் இதுபோன்று பலவாறாகக் கருதுகிறார்கள்.'' [29] ஆனால் போல்ஷ்விக்குகள் இதில் தெளிவாக இருந்தனர். அதைப் பற்றியும் லெனின் கூறினார்: விவசாயிகள் புரட்சி என்பது முதலாளித்துவப் புரட்சியில் ஒரு வகையே. விவசாயிகள் புரட்சி என்பது தொழிலாளர்கள், விவசாயிகளின் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரத்தின் வெற்றியால் வரை யறுக்கப்படுகிறது.'' [30]

இரசியப் புரட்சியைப் போலவே சீனப் புரட்சியிலும் இப் போக்கு வெளிப்பட்டது. 1927 புரட்சியில் சீன தேசிய முதலாளி வர்க்கப் பிரிவின் துரோகத்தால் புரட்சி தோல்வியடைந்த போது ''ஜனநாயகப் புரட்சியின் வெற்றி என்பது முதலாளி வர்க்கத்தின் வெற்றியே'' [31] என்று கூறிய சென்டி யூஷி ''புரட்சி முதலாளி வர்க்கத்தின் ஆதரவை இழக்குமானால் அப்புரட்சி அதற்கான சமூக அடிப்படையையும், வர்க்க முக்கியத்துவத்தையும் இழந்து விடும்'' [32]



என்று கூறினார். அவருடைய தவறும் ரசிய பிளக்கானவ் மற்றும் மென்ஷ்விக்குகளின் தவறைப் போன்றதே. விவசாயிகளின் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட முதலாளிய ஜனநாயகப் புரட்சியை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. விவசாயிகளின் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட முதலாளிய ஜனநாயகப் புரட்சி தொழிலாளர் – விவசாயிகளின் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரம் என்பதை அடிப்படையாகக் கொண்டது – முதலாளிய ஜனநாயக சர்வாதிகாரம் என்பதை அல்ல – என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் மாவோவின் தலைமையில், சீனக்கட்சி இத்தவறைக் களைந்தது. ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார வர்க்க முதலாளித்துவம் ஆகியவற்றை முறியடித்து புரட்சி வெற்றிகாண தொழிலாளர், விவசாயிகளின் கூட்டினால் மட்டுமே சாத்தியம் என்ற கருத்து நிலைநாட்டப்பட்டது. அதையே மாவோ கூறினார். ''ஏகாதிபத்தியத்தையும், கோமிண்டாங் பிற்போக்காளர்களையும், தூக்கி எறிவதில் இந்த இரண்டு வர்க்கங்களே பிரதான சக்திகள் ஆகும்.'' [33]

அடுத்து பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் அமையும் அரசு முதலாளிய ஜனநாயகக் குடியரசல்ல. லெனின் கூறினார் : ''முதலாளித்துவக் குடியரசிலேயே மிகவும் முழுமையான முன்னேறிய ஜனநாயக வடிவம் பாராளுமன்ற ஜனநாயக முறையாகும். அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப் பட்டிருக்கும். அரசு இயந்திரம், நிர்வாகத்தின் கருவிகள், ஸ்தாபனங்கள் இவை அனைத்தும் வழக்கப்படியே இருக்கும். இவை – நிரந்தர இராணுவமும் போலீசும், அதிகார வர்க்கமும் நடைமுறையில் மாற்றப்பட முடியாதவை, சலுகை பெற்றவை, மக்களுக்கு அப்பாற் பட்டவை.'' ''முதலாளியப் பாராளுமன்ற ஜனநாயகம் என்பது மக்களின் சுதந்திரமான வாழ்வில் இடையூறுகளை விளைவித்து திக்குமுக்காடச் செய்வது; அரசாங்க வேலையில் மேலிருந்து கீழ்வரை ஜனநாயகப் பூர்வமாகப் பங்கெடுப்பதற்கு இடையூறாக நிற்பது.'' [34] பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான ஜனநாயகப் புரட்சியில் அமைக்கப் படும் அரசமைப்பு இத்தகைய 'ஜனநாயகத்' தன்மையுள்ளதல்ல; மாறாக புதிய ஜனநாயகத் தன்மையுள்ளதாகும்.

இதுவரை இருந்து வந்துள்ள அரசு அமைப்புகளிலேயே ஜனநாயகமான அரசமைப்பு என்று சொல்லப்பட்டவற்றிலிருந்து

படிப்பகம்

www.padippkam.com



மாறுபட்ட ஒன்றாகும். ஏங்கல்ஸ் கூறியது போல் ஒரு அர்த்தத்தில் "அரசாங்க அமைப்பாக இல்லாத, அரசாங்க அமைப்பு என்ற அதன் பொருளுக்குப் பொருந்தாத அரசாங்க அமைப்பாகும்." [35]

இந்த அரசாங்க அமைப்பு பாரீஸ் கம்யூன் போன்றது. இதில் மக்களிடமிருந்து பிரிந்து நிற்கும் நிரந்தர இராணுவத்திற்கும் போலீசுக்கும் பதில் மக்களே ஆயுதபாணிகளான படையினராக இருப்பர். சட்டமியற்றும் பாராளுமன்ற அமைப்பும், செயல்படுத்தும் நிர்வாக அமைப்பும் தனித்தனியே இருப்பதற்குப் பதில் சட்டமியற்றும் அமைப்பே செயல்படுத்தும் அதிகார அமைப்பாக இருக்கும். தொழிலாளர், விவசாயிகள் மற்றும் புரட்சிகர மக்கள் பிரிவினரின் பிரதிநிதிகளடங்கிய சோவியத்துகளே அதிகார அமைப்புகளாக இருக்கும். இது வழக்கமான முதலாளி அமைப்புகளிலிருந்து மாறுபட்டதாகும். இத்தகைய அமைப்புகள் மூலம் மட்டுமே தங்கள் ஜனநாயகத்தை மக்கள் காத்துக்கொள்ள முடியும். இத்தகைய அமைப்புகள் மக்களின் புரட்சிகர ஆயுதம் தாங்கிய எழுச்சிகள் மூலம் மட்டுமே அமைய முடியும். சட்டப்பூர்வமான ஏற்கெனவே உள்ள நிறுவனங்கள் மூலம் அமைய முடியாது.

1871 பாரீஸ் கம்யூனும் 1905, 1917 இரசியப் புரட்சியின் சோவியத்துகளும், பின் சீன புதிய ஜனநாயகப் புரட்சியின் புரட்சிகர மக்கள் கமிட்டிகளும் இத்தகைய அரசமைப்புகளேயாகும். இத்தகைய அரசமைப்புகள் மக்களிடமிருந்து பிரிந்து இருக்காத அரசமைப்புகள் ஆகும். 1917 பிப்ரவரியில் ஜாரைத் தூக்கிஎறிந்தபின் இரசியாவில் இரட்டை ஆட்சி அதிகாரம் அமைந்தது. ஒரே சமயத்தில் அடுத்தடுத்து முதலாளிகளின் ஆட்சியும் (லவாவ், குச்சாவ் கூட்டத்தின் அரசாங்கம்) தொழிலாளர், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளும் இருந்தன.[36] ஜார் ஆட்சிக்கு பதில் அமைந்த முதலாளிகளின் குடியரசை சிலர் ஆதரித்தபோது பின்னோக்கிச் செல்வதை லெனின் எதிர்த்தார். கம்யூன் அரசு வடிவத்தில் அமைந்த தொழிலாளி – விவசாயிகள் மற்றும் புரட்சிகர மக்களின் பிரதிநிதிகளடங்கிய சோவியத் ஆட்சியையே ஆதரித்தார்.

அவர் கூறினார் :

"இத்தகைய அரசாங்க அமைப்பைத்தான் 1905, 1917 ரசியப் புரட்சிகள் கட்டமைக்க ஆரம்பித்தது... ... லட்சோப லட்சம் மக்கள்



தாங்களாகவே தங்களது முன்முயற்சியால் அமைக்கும் அகில ரசிய நிர்ணயசபை அல்லது சோவியத்துகளின் கவுன்சில்கள் அய்க்கியப்படுத்தப்பட்ட தொழிலாளர், போர்வீரர், விவசாயிகள் மற்றவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சோவியத்துகளாலான ஒரு குடியரசு ஏற்கெனவே உருவாகி வருகிறது."

"இப்போது தோன்றியிருக்கும் நமது புதிய அரசு, முறையான கருத்தில் உள்ள அரசு அல்ல; ஏனெனில் இந்த காவல்படையினர் ரசியாவில் பல பாகங்களில் வெகுஜனங் களாகவே உள்ள மக்கள் அனைவரும் ஆகும். சில சலுகை வாய்ந்த நபர்களோ, மக்களுக்கு மேலே மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டு நடைமுறையில் நீக்கப்பட முடியாதவர்களோ அல்ல."

"வழக்கமான முதலாளி ஜனநாயக அமைப்பிலிருந்து முன்னோக்கிப் பார்க்க வேண்டுமேயல்லாது பின்னோக்கியல்ல. அது (முதலாளிய ஜனநாயகம்) பழைய மன்னராட்சி நிர்வாக ஸ்தாபனங்களான போலீஸ், இராணுவம், அதிகார வர்க்கத்தின் துணைகொண்டு முதலாளித்துவ ஆதிக்கத்தைப் பலப்படுத்தியது."

"நாம் ஒரு **புதிய ஜனநாயகத்தை** எதிர்நோக்க வேண்டும், இது பிறந்து கொண்டிருக்கிறது. ஜனநாயகம் இல்லாது போய்விட்டது. ஜனநாயகம் என்பது மக்களின் ஆட்சி என்பதாகும்; ஆனால் ஆயுதபாணிகளான மக்கள் தங்களையே ஆட்சி செய்ய முடியாது."

"கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை , ஜனநாயகம் என்ற பதம் விஞ்ஞான வகையில் தவறானது மட்டுமல்ல. தற்போது 1917 மார்ச்சுக்குப் பின் புரட்சிகரமான மக்கள் தைரியமாகவும் சுதந்திரமாகவும் தங்கள் முன் முயற்சியில் புதிய அமைப்பைக் கட்டி வளர்ப்பதினின்றும் தடுத்து நிறுத்தும், புரட்சிகர மக்களின் கண் களை மூடும் முகமூடியாகவுமே ஆகிவிட்டது. தொழிலாளர்கள், விவசாயிகள் மற்ற பிரதிநிதிகளின் சோவியத்துகள் அரசின் ஒரே **அதிகாரமாக** இருப்பதே புதிய அமைப்பு. அரசாங்கம் மறைந்து போவதற்கான முன்னோடியாகும் இந்த அமைப்பு." [37]

*சீனத்தில்* பாட்டாளி வர்க்கத் தலைமையில் நடத்தப்பட்ட முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் அமையும் அரசு வடிவம் பற்றி தோழர் மாவோ கூறினார் :

"ஒரு புறத்தில் ஏற்கெனவே பழமையாகி **விட்டதும்** முதலாளிய சர்வாதிகாரத்தினால் ஆளப்படுவதும் ஆன மேலை

படிப்பகம்

www.padippkam.com



நாட்டு வகையைச் சேர்ந்த முதலாளித்துவக் குடியரசினின்றும் நம் புதிய ஜனநாயகம் மாறுபட்டது; மறுபுறத்தில் சோவியத் வகையான சோசலிச குடியரசிலிருந்தும் வேறுபட்டது. மேலும் எல்லா முதலாளித்துவ நாடுகளில் அமையவிருப்பதும், தொழிலளவில் மிகவும் முன்னேறியுள்ள நாடுகளில் சந்தேகத்திற்கிடமின்றி அமையப் போவதுமான சோவியத் வகையான சோசலிசக் குடியரசினின்றும் சீனப் புதிய ஜனநாயகக் குடியரசு மாறுபட்டது. ஆயினும் ஒரு குறிப்பிட்ட வரலாற்று பூர்வமான காலகட்டத்தில் காலனி, அரைக்காலனி நாடுகளில் சோவியத் வகையைச் சேர்ந்த குடியரசை கொண்டுவர முடியாது. எனவே இந்நாடுகளின் அரசு வடிவம் (Form of State) மூன்றாவது வகையைச் சேர்ந்ததாகவே இருக்கும். அதுதான் புதிய ஜனநாயகக் குடியரசாகும். இந்த அரசு வடிவம் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்திற்கானது. ஆகவே இது இடைக்காலத்தன்மை கொண்டது. ஆனாலும் இது தவிர்க்க முடியாத – மாற்ற முடியாத இடைக்கால வடிவமாகும்''.

''அனைத்து புரட்சிகர வர்க்கங்களின் கூட்டு சர்வாதி காரத்தின் கீழ் உள்ள அரசு அமைப்பும் ஜனநாயக மத்தியத்துவ முறையிலான அரசாங்க அமைப்பும்தான் புதிய ஜனநாயகத்தின் அரசியல்; இதுவே ஜப்பானிய எதிர்ப்பு முன்னணியின் குடியரசாகும்; மாபெரும் மூன்று கொள்கைகளை உள்ளடக்கிய மக்களின் மூன்று புதிய கோட்பாடுகளின் குடி அரசு; இதுதான் பெயரிலும் எதார்த்தத்திலும் சீனக் குடியரசாகும்.''[38]

சீனத்தின் புதிய ஜனநாயகம் என்பதும் பழைய முதலாளிய வகைப்பட்ட பாராளுமன்றக் குடியரசு அல்ல மாறாக பாரீஸ் கம்யூன் வகைப்பட்ட சோவியத் வடிவம் கொண்ட அரசாகும். அதே நேரத்தில் சோவியத் ரசியாவின் மாதிரியிலிருந்து மாறியிருந்தது. ஏனெனில் இது தேசிய முதலாளிகளையும் உள்ளடக்கிய நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகர வர்க்கங்களின் கூட்டு சர்வாதிகாரம் ஆக இருந்தது.

எனவேதான் மாவோ கூறினார் :

''சீனப்புரட்சியின் வரலாற்று வகையிலான குணாம்சம் என்னவென்றால் அது இரண்டு படிகளாக அதாவது ஜனநாயகம், சோசலிசம் என்ற இரண்டு படிகளாக பிரிக்கப்பட்டுள்ளதாகும். முதற்படியாகக் கூறப்படும் ஜனநாயகம் பொதுவான பொருளில் கூறப்படும் ஜனநாயகமல்ல. ஆனால் அது ***சீன வழியில் வந்த ஒரு புதிய, சிறப்பான வகையைச் சேர்ந்த புதிய ஜனநாயகமாகும்.''*** [39]
(அழுத்தம் எமது )



சோவியத் ரசியாவில் கட்டப்பட்ட தொழிலாளர், விவசாயிகள் மற்றும் பிற பிரதிநிதிகளின் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரமும், சீனத்தின் புரட்சிகர வர்க்கங்களின் கூட்டு சர்வாதிகாரமும் இரண்டுமே புதிய ஜனநாயகமே, முதலாளிய ஜனநாயகக் குடியரசு வகைப்பட்ட பழைய ஜனநாயகம் அல்ல என்பதை இங்கு குறித்துக் கொள்வது அவசியம். இது பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் மற்றொரு அம்சமாகும்.

சுருங்கக்கூறின் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்பது முதலாளிகள் தலைமையிலான ஆட்சியை ஏற்படுத்துவதில்லை, மாறாக தொழிலாளிகள் – விவசாயிகள் கூட்டை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர வர்க்கங்களின் ஜனநாயக சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதாகும். மேலும் அது பாராளுமன்ற முதலாளியக் குடியரசை ஏற்படுத்துவதில்லை. அதாவது சட்டமியற்றும் அமைப்பும் அதை நிறைவேற்றும் அமைப்பும் தனித் தனியாக இருக்கின்ற, மக்களிடம் இருந்து பிரிந்த போலீசும், இராணுவமும் இருக்கின்ற, அதிகார வர்க்கத்தைக் கொண்ட அரசு முறையை ஏற்படுத்துவதில்லை. மாறாக பாரீஸ் கம்யூன் பாணியிலான, சோவியத் பாணியிலான, மக்களின் ஆயுதம் தாங்கிய படைகளும், மக்களின் அதிகாரமும், நீதியும் – பெரும்பான்மையினர் மேலாதிக்கம் – நிலைநாட்டப்படுவதாகும்.

***நான்காவதாக,*** முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமை என்பது ஜனநாயகப் புரட்சி இடையீடின்றி சோசலிசப் புரட்சிக்கு முன்னேறும் என்பதாகும்.

முதலாளிகள் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சியை முதலாளிய ஜனநாயகத்துடன் முடிவுக்குக் கொண்டு வருவதே முதலாளிய, குட்டி முதலாளிய சக்திகளின் விருப்பமும் முயற்சியும் ஆகும். ஜனநாயகக் கோரிக்கைகள் வெல்லப்பட்ட பின் தடைபடாது நடந்தேற வேண்டிய புரட்சியைப் பற்றி மார்க்ஸ் கீழ்க்கண்டபடி கூறினார் :

''மேலே நான் குறிப்பிட்ட கோரிக்கைகளில் கூடுமானவரை எல்லாவற்றையும் பெற்றவுடன் எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ

படிப்பகம்

www.padippkam.com



அவ்வளவு சீக்கிரத்தில் புரட்சியை முடித்துவிட ஜனநாயக மனப்பான்மையுள்ள மத்தியதர வர்க்கம் விரும்பும். ஆனால் நம் – நலன்களும் கடமையும் எதில் அடங்கியுள்ளனவென்றால் அந்தப் புரட்சியை நிரந்தரமானதாக ஆக்குவதில்தான். சொத்துள்ள வர்க்கங்கள் யாவும் ஆதிக்க பீடத்திலிருந்து வீழ்த்தப்படும் வரையில், தொழிலாளி வர்க்கம் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றும் வரையில், ஒரு நாட்டில் மட்டுமல்லாமல் உலகில் முக்கியமான நாடுகள் அனைத்திலும் தொழிலாளிகளுக்கு இடையில் போட்டி இல்லாதவாறு செய்து பிரதான பொருளுற்பத்தி சக்திகள் யாவும் தொழிலாளிகளின் கையில் திரண்டு சேரும் நிலைமை உண்டாகும் அளவுக்கு தொழிலாளிகளின் கூட்டுறவு முன்னேறும் வரையில் புரட்சி நீடித்து நடத்தப்பட வேண்டும்'' (கார்ல் மார்க்ஸ் தேர்வு நூல் தொகுப்பு 2, பக் 161.)

எனவேதான் முதலாளிய ஜனநாயகப் புரட்சியை நடத்தும் கடமையை பாட்டாளி வர்க்க இயக்கம் தனது குறைந்தபட்சத் திட்டமாக எடுத்துக் கொள்ளும்போது தனது உயர்ந்தபட்சத் திட்டமான சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் விரைவுபடுத்துவதற்காக மட்டுமே எடுத்துக் கொள்கிறது.

லெனின் கூறினார் :

''அடிப்படையில் வேறுபட்ட இக்கட்டங்களை திட்ட வட்டமாக வேறுபடுத்திப் பார்ப்பதும் எந்த நிலைமைகளில் இக்கட்டங்கள் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன என்பதை நிதானமாக ஆராய்வதும் ஒருவரது இறுதிக் குறிக்கோளைக் காலவரம்பின்றி ஒத்தி வைப்பதாகவோ அல்லது முன்னோக்கிச் செல்லும் ஒன்றில் வளர்ச்சியைத் தாமதப்படுத்துவதாகவோ பொருள் படுவதில்லை. இதற்கு மாறாக இம்முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் நோக்கத்திற்காகவும், இறுதிக் குறிக்கோளை இயன்ற மட்டுக்கும் விரைவாகவும் எச்சரிக்கையாகவும் சாதிப்பதற்காகவும், நவீன சமுதாயத்தில் உள்ள வர்க்கங்களின் வடிவைப் புரிந்துகொள்வது அவசியமானதாகும்.'' [40]

முதல் கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்திற்கு ஜனநாயகப் புரட்சி கட்டத்திலிருந்து சோசலிசக் கட்டத்திற்குச் செல்வதற்கு இடையே பெரிய சீனச்சுவர் எதுவும் இல்லை. பாட்டாளி வர்க்கத்தின் தயார் நிலை மற்றும் பாட்டாளி வர்க்கம் எந்த அளவுக்கு ஏழை விவசாயிகளுடன் ஐக்கியப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்த விசயமே அது.



லெனின் கூறினார் :

''முதலாவதாக அனைத்து விவசாயிகளையும் ஒருங்கிணைத்து முடியரசுக்கும், நிலப்பிரபுத்துவத்துக்கும், மத்தியகாலத்தின் மீத மிச்சங்களுக்கும் எதிராக நடத்திய போராட்டம்; இந்த அளவுக்கு முதலாளி வர்க்க ஜனநாயகப் போக்குடையதாக புரட்சி அமைந்திருந்தது. பிறகு கிராமப்புற பணக்காரர்கள் குலாக்குகள், கொள்ளை லாபக்காரர்கள் ஆகியோரை உள்ளடக்கிய முதலாளியத் துக்கு எதிராக ஏழை விவசாயிகள், அரைப்பாட்டாளிகள் மற்றும் சுரண்டப்பட்ட அனைவரையும் ஒன்றிணைத்து நடத்திய போராட்டம், இந்த அளவுக்கு புரட்சி ஒரு சோசலிசப் போக்குடையதாக அமைகிறது. முதல் கட்டத்திற்கும் இரண்டாவது கட்டத்துக்கும் இடையே ஒரு செயற்கையான சீனச்சுவரை எழுப்ப முயல்வதும், பாட்டாளி வர்க்கத்தின் ஆயத்த நிலைமை, பாட்டாளி வர்க்கம் ஏழை விவசாயிகளோடு கொண்டிருந்த அய்க்கியத்தின் அளவு என்பதை விடுத்து வேறு எதனைக் கொண்டும் இவ்விரண்டையும் பிரித்துப்பார்க்க முயல்வதும் மார்க்சியத்தை அபாயகரமான வழியில் சிதைப்பதாகும்; அதைக் கொச்சைப்படுத்துவதாகும்; அதற்கு பதிலாக மிதவாதத்தைக் கொண்டு வருவதாகும்.'' [41]

சீனத்திலும் புரட்சியின் இரு கட்டங்களைப் பற்றி மாவோ கூறும்போது தெளிவாகவே கூறினார். முதலாளித்துவத்தின் சுதந்திரமான, முழுமையான, விரைவான வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும் சக்திகளை எதிர்த்த ஜனநாயகப் புரட்சிக் கட்டம் என்றும் பின்னர் சோசலிசப் புரட்சிக் கட்டம் என்றும் குறிப்பிட்டார். இரண்டுக்கும் இடையே சீனச்சுவர் எதுவும் இல்லை. ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து சோசலிசப் புரட்சி தொடங்குவதாகும்.

அவர் கூறினார் :

'' சீனப்புரட்சியின் போக்குகள் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். முதல் கட்டம் காலனிய, அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவத் தன்மை கொண்ட சமூகத்தை, ஒரு சுயேச்சையான ஜனநாயக சமூகமாக மாற்ற வேண்டியதாகும். இரண்டாவது கட்டத்தில் சோசலிச சமூகத்தை உருவாக்க புரட்சியை முன்னோக்கித்தள்ள வேண்டியதாகும்..... ........ முதல் கட்டம் தனது சமூக குணாம்சத்தின்படி முதலாளிய ஜனநாயகத்

www.padippkam.com



தன்மைகளையே கொண்டிருக்கிறது. அப்புரட்சியின் முதல் கட்டத்தின் ஸ்தூலமான, திட்டவட்டமான தேவைகள் முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் பாதையில் உள்ள தடைக் கற்களை அகற்றுவதாகவே உள்ளது. இப்படி இருந்தபோதிலும் இத்தகையபுரட்சி இனி முதலாளிய வர்க்கத்தால் தலைமை தாங்கப்படுவதும், முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவ சமூகத்தை உருவாக்கும் நோக்கம் கொண்டது மான பழைய வகையைச் சார்ந்த முதலாளிய புரட்சியாக இருக்கவில்லை. ஆனால் இது பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் புதிய வகைப்பட்ட புரட்சிகர வர்க்கங்களின் கூட்டு சர்வாதிகாரத்தின் கீழ் அரசை அமைப்பதாகும். இவ்வாறாக, இந்தப் புரட்சி சோசலிச வளர்ச்சிக்கான பாதையை விரிவாக்குவதற்கு உண்மையிலேயே சேவை செய்கிறது.'' [42]

''ஜனநாயகப் புரட்சி என்பது சோசலிசப் புரட்சிக்கு அவசியமான தயாரிப்பாகும், சோசலிசப் புரட்சி ஜனநாயகப் புரட்சியின் தவிர்க்க முடியாத தொடர்ச்சியாகும்.'' [43]

முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச்செல்லும் காலகட்டத்தில் புரட்சி தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இடையில் பாராளுமன்றக் குடியரசை, முதலாளிய சர்வாதி காரத்தை அனுமதிக்கக்கூடாது என லெனினும், மாவோவும் வலியுறுத்தினர். முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்லும்போது இடையில் அமையும் அரசு பழைய முதலாளிய ஜனநாயகக் குடியரசாக அல்ல பாரீஸ் கம்யூன் வகைப்பட்ட, சோவியத் வடிவிலான அரசமைப்பாகவே இருக்கும். அப்படி இருக்கும்போது மட்டுமே முதலாளிய ஜனநாயகப் புரட்சி சோசலிசத்திற்கு முன்னேறுவது சாத்தியமாகும்.

ரசியாவில் பிப்ரவரி புரட்சிக்குப் பின் முதலாளிகள் தலைமை யில் அமைந்த முதலாளிய ஜனநாயக பாராளுமன்றக் குடியரசை மென்ஷ்விக்குகளும் சோசலிசப் புரட்சியாளர்களும் ஆதரித்தபோது அதை எதிர்த்து ''வழக்கமான முதலாளிய ஜனநாயக அமைப்பிலிருந்து முன்னோக்கிப் பார்க்க வேண்டுமேயல்லாது பின்னோக்கி அல்ல'' என்றார் லெனின்.

1917 பிப்ரவரி புரட்சியின் விளைவாக ரசியாவில் ஒரு வகை இரட்டை ஆட்சி ஏற்பட்டிருந்தது. அதைப் பற்றி லெனின் கூறினார் :



''நமது புரட்சியின் சிறப்புத் தன்மை என்னவெனில் – இந்தச் சிறப்புத்தன்மை நாம் சிந்தனை செய்து ஆழ்ந்து கவனிக்க வேண்டிய ஒன்றாகும் – புரட்சி வெற்றி பெற்ற ஆரம்ப நாட்களிலேயே எழுந்த இரட்டை அதிகாரமாகும்.இந்த இரட்டை அதிகாரம் இரண்டு அரசுகள் இருப்பதில் பிரதிபலிக்கிறது. ஒன்று பிரதான, எதார்த்தத்தில் இயங்கும், தன் கையில் எல்லா அதிகார அங்கங்களையும் கொண்டுள்ள லவாங் கூட்டத்தின் ''இடைக் கால அரசாங்கம்''. மற்றொன்று அதற்கு இணையாக உள்ள தொழிலாளர் – விவசாயிகள் – போர் வீரர்களடங்கிய பெட்ரோகிராட் சோவியத்துகளின் உருவத்தில் உள்ள 'கட்டுப்படுத்தும்' அரசாங்கம். ஆனால் அரசாங்க அதிகாரம் எதுவும் இதன் கையில் இல்லை. இது நிச்சயமாக பெரும்பான்மை மக்களாலும், ஆயுதம் தாங்கிய தொழிலாளர்களாலும், போர் வீரர்களாலும் நேரடியாக ஆதரிக்கப்படுகிறது என்பது தெளிவாகும்.''

''இந்த இரட்டை அதிகாரத்தின் வர்க்க அடிப்படையும், வர்க்க முக்கியத்துவமும் எதில் அடங்கியுள்ளது? 1917 மார்ச் புரட்சி ஜார் மன்னராட்சியை துடைத்தெறிந்தது மட்டுமல்லாமல், தொழிலாளர் – விவசாயிகளின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகார கட்டம் வரையிலும் கூட இது வந்ததில் அடங்கியுள்ளது.'' [44]

எனவே இந்தக் கட்டத்தில் முதலாளிகளின் பாராளுமன்றக் குடியரசை பலப்படுத்த வேண்டும் எனக் கோரியவர்களைப் பார்த்து லெனின் கூறினார் :

''பார்லிமெண்ட் அமைப்புள்ள குடியரசல்ல, தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகளைக் கைவிட்டு, பார்லிமெண்ட் குடியரசாக மீண்டும் மாற்றுவது ஒரு பிற்போக்கு நடவடிக்கையாகும். அதற்கு பதில் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் பிரதிநிதிகள் கொண்ட சோவியத்துகளை மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை நாடெங்கும் கொண்ட குடியரசு தான் அமைய வேண்டும்.'' [45]

இத்தகைய அரசு உண்மையில் ஒரு முதலாளிய ஜனநாயகக் குடியரசேயாகும். நிச்சயமாக ஒரு சோசலிசக் குடியரசு அல்ல. அது சோசலிசத்தைப் புகுத்தும் நடவடிக்கை எனக் கூறியவர்களை மறுத்து லெனின் கூறினார் :

படிப்பகம்

www.padippkam.com



"ஜார் (மன்னர்) வேண்டாம், பதிலாக தொழிலாளர் அரசு வேண்டும் என்று நான் சொல்லியிருந்தால் இந்த அபாயம் எனக்கு ஏற்பட்டிருக்கலாம். நான் அவ்விதம் சொல்லவில்லை. நான் சொன்னது வேறு; ரசியாவில் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், போர்வீரர்கள், விவசாயிகள் ஆகியோரின் பிரதிநிதிகள் கொண்ட சோவியத்துகளின் அரசாங்கம் மட்டுமே இருக்க முடியும் என்று சொன்னேன். ரசியாவில் குச்சாவ் – லவாவ் கைகளிலிருந்து அதிகாரம் இந்த சோவியத்துகளுக்கு மட்டுமே இப்போது மாற முடியும் என்று கூறினேன். உண்மை என்ன வெனில், இந்த சோவியத்துகளில் ஆதிக்கம் வகிப்பது விவசாயிகளே, ஆதிக்கம் வகிப்பது போர் வீரர்களே. சாதாரண பாமர அல்லது தொழில்முறையில் கூறாமல் விஞ்ஞான வகையான மார்க்சிய பதத்தில் வர்க்க அடிப்படையில் கூறவேண்டுமானால், குட்டி முதலாளிகளே ஆதிக்கம் வகிக்கின்றனர். எனது ஆய்வுரையில் இன்னும் இருந்து வரும் விவசாய அல்லது பொதுவான குட்டி முதலாளிய இயக்கங்களை விட்டுத் தாவிச் செல்லும் தவறிலிருந்து என்னை நான் காத்துக் கொண்டேன்." [46]

1917 அக்டோபரில் லவாவ் முதலாளிய கும்பலின் ஆட்சி அதிகாரத்தை தூக்கி எறிந்து விட்டு சோவியத்துகளின் ஆட்சி – தொழிலாளிகள், விவசாயத் தொழிலாளிகள், விவசாயிகள், போர்வீரர்கள் பிரதிநிதிகள் அடங்கிய சோவியத்துகளின் ஆட்சி – வெற்றி பெற்றது. அப்போது இப்புரட்சி முதலாளிய ஜனநாயகப் புரட்சியாகவே இருந்தது. இப்புரட்சி பற்றி லெனின் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சி – போல்ஷ்விக் – எட்டாவது காங்கிரஸில் நிகழ்த்திய உரையில் - (1919 மார்ச் 23) - குறிப்பிட்டார் :

"1917 அக்டோபரில் நாம் விவசாயிகள் அனைவருடனும் ஒன்று சேர்ந்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினோம். கிராமப் புறத்தில் வர்க்கப் போராட்டம் இன்னும் வளர்ச்சி பெறாததால் இது **முதலாளித்துவப் புரட்சியாகவே** இருந்தது. ஏற்கெனவே நான் கூறியது போல் கிராமப்புறத்தில் மெய்யான பாட்டாளி வர்க்கப் புரட்சி 1918 கோடையில்தான் ஆரம்பித்தது. இந்தப் புரட்சியை கிளர்ந்தெழச் செய்வதில் நாம் வெற்றி பெற்றிராவிடில் நமது பணி அரை குறையானதாகவே இருந்திருக்கும். நகரங்களில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி சோவியத் ஆட்சி முறையை நிறுவுவதே முதற் கட்டமாய்



இருந்தது. இரண்டாவது கட்டம் எல்லா சோசலிஸ்டுகளுக்கும் அடிப்படையானது. இது இல்லாமல் சோசலிஸ்டுகள் சோசலிஸ்டுகளாய் இருக்க முடியாது. கிராமப்புறத்தில் பாட்டாளி வர்க்கத்தினரையும் அரைப்பாட்டாளி வர்க்கக் கூறுகளையும் தனித்துப் பிரித்து, கிராமப்புற முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய் போராட்டம் நடத்தும் பொருட்டு இவர்கள் நகர்ப்புறத்து பாட்டாளி வர்க்கத்துடன் ஒரு சேர இணைத்திடுவதே இந்த இரண்டாவது கட்டம்." [47]

1917 பிப்ரவரி புரட்சியில் முதலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டதால் ஜனநாயகப் புரட்சி முடிந்துவிட்டது என்றோ சோசலிசப் புரட்சி தொடங்கிவிட்டது என்றோ கூறப்பட்டதையும் எதிர்த்தார். மாறாக, 'சோசலிசத்தை உடனடியாக கொண்டு வரக் கூடாது' என்று ஏப்ரல் ஆய்வுரைகளில் எழுதினார். மாறாக அப் போதைய நிலை பற்றி அவர் குறிப்பிட்டதாவது:

"ரசியாவின் இன்றைய நிலையில் சிறப்பான அம்சம் என்னவெனில் அது புரட்சியின் முதல் கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்திற்குப் போவதற்கான இடைக் காலத்தை (Transitional) பிரதிபலிக்கிறது." [48]

முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்குப் போகும் இடைக் காலத்தில் இருக்க வேண்டிய அரசு வடிவம் முதலாளிய பாராளு மன்றக் குடியரசல்ல. மாறாக பாரீஸ் கம்யூன், சோவியத் வடிவிலான அரசமைப்பே என்பதை வலியுறுத்தினார். அவர் கூறினார்.

"மார்க்சியத்திற்கும் அராஜகவாதத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் பொது புரட்சி காலகட்டத்திலும், குறிப்பாக முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்தை நோக்கிச் செல்லும் இடைக் காலத்திலும் அரசாங்க அமைப்பும், அரசாங்க அதிகாரமும் தேவைப் படுகின்றன என்று மார்க்சியம் அங்கீகரிக்கிறது. பிளக்கானவ், காட்ஸ்கி அன் கம்பெனிகளின் குட்டி முதலாளிய சந்தர்ப்பவாத சமூக ஜனநாயகத்திலிருந்து மார்க்சியம் மாறுபடுவது என்னவெனில் இந்தக் கால கட்டத்தில் தேவைப்படுவது வழக்க மான முதலாளிய பாராளுமன்ற குடியரசு மாதிரி அல்லாமல் பாரீஸ் கம்யூன் போன்ற அரசாங்க அமைப்பு தான் என்று கூறுவதாகும்." [49]

www.padippakam.com



சீனத்திலும் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமை ஏற்கும் பாட்டாளி வர்க்கக் கூட்டு சோசலிசத்திற்குப் போகும் இடைக்கட்டத்தில் முதலாளிய சர்வாதிகாரத்தை அனுமதிக்கக்கூடாது என்பதை மாவோவும் தெளிவாகக் கூறினார்.

அவர் கூறினார் :

> "புரட்சியின் இரு கட்டங்களிலே முதற்கட்டம் இரண்டாம் கட்டத்திற்கு முன் தேவை என்பதும், இரண்டாம் கட்டம் முதற்கட்டத்தோடு தொடங்கி அதைப் பின்தொடர வேண்டும் என்பதும் இவ்விரண்டு கட்டங்களுக்கு இடையில் முதலாளிய சர்வாதிகாரம் நுழைக்கப்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்பதும்தான் புரட்சி பற்றிய சரியான கண்ணோட்டம் ஆகும். இதுவேதான் புரட்சியின் வளர்ச்சி பற்றிய மார்க்சியக் கொள்கையாகும்." [50]

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சி சோசலிசப் புரட்சியாக முன்னேறுவதற்கு "விவசாயப் பிரதிநிதிகள் கொண்ட சோவியத்துகளை உடனடியாக பிரிவினை செய்யாமலேயே, விவசாயத் தொழிலாளியின் பிரதிநிதிகள் சோவியத்துகளையும் ஏழை (அரைப்பாட்டாளி) விவசாயிகளின் பிரதிநிதிகள் சோவியத்துகளையும் தனியே அமைக்க வேண்டியதன் அவசியத்தை, அல்லது குறைந்தபட்சம் இந்த வர்க்க அந்தஸ்து உள்ள பிரதிநிதிகளின் தனியான மாநாடுகளை, விவசாயப் பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்குட்பட்டே தனியான குழுக்கள், கட்சிகள் என்ற உருவில் முறையாக நடத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கியாக வேண்டும்" [51] என்று லெனின் வலியுறுத்தினார்.

சீனத்தில் புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் – புதிய ஜனநாயக சமூக அமைப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்று சிலர் முழக்கம் வைக்கும்போது அந்த வலது விலகலை எதிர்த்து 'சோசலிசத்தை நோக்கி படிப்படியாக மாற்றம்' என்ற முழக்கத்தை மாவோ முன் வைத்தார். [52]

எனவே பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்பது ஜனநாயகப் புரட்சியுடன் இடையில் நின்று விடுவதல்ல. பாட்டாளி வர்க்கத்தின் தயார் நிலையையும், அது ஏழை விவசாயிகளுடன் கொண்டிருக்கும் ஒற்றுமையின் அளவையும்



பொறுத்து ஜனநாயகப் புரட்சி சோசலிசப் புரட்சிக்கு முன்னேறும்; மேலும் முதலாளிய பாராளுமன்றக் குடியரசு வகையிலான ஒரு இடை நிலை அரசின் மூலமாக அன்றி கம்யூன் வடிவிலான அரசு மூலமே சோசலிசத்திற்கு முன்னேறும். பாராளுமன்றக் குடியரசிலிருந்து சோசலிசத்திற்கு மாறமுடியும் என்றும் முதலாளிய பாராளுமன்றக் குடியரசு ஏற்பட்டவுடனேயே ஜனநாயகப் புரட்சி நிறைவு பெற்று விட்டது – எனவே சோசலிசப் புரட்சிக்கு திட்டம் வைத்து முன் செல்லவேண்டும் என்றும் கூறுவது.... அதுவும் விவசாயிகள் மிகுந்த ஒரு பின்தங்கிய நாட்டில் கூறுவது போன்ற (இது மார்க்சியமல்ல) இத்தகைய குட்டி முதலாளிய சந்தர்ப்பவாதத்தை முறியடித்து புரட்சி சோசலிசத்திற்கு முன்னேறும் என்பதாகும்.

முடிவாக இரு மாபெரும் புரட்சிகளையும் தொகுத்து பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகப் புரட்சி பற்றி கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வரமுடியும்.

1. 1871 பாரீஸ் கம்யூன் நிகழ்ச்சிக்குப்பின் முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவம் மற்றும் மத்தியகால மீதமிச்சங்களை ஒரு புரட்சியின் மூலம் அழித்தொழித்து முதலாளித்துவத்தின் விரிவான, விரைவான, சுதந்திரமான வளர்ச்சிக்கு வழிவகுப்பதைக் கைவிட்டு விட்டது.

மாறாக நிலப்பிரபுத்துவ, மற்றும் அனைத்துப் பிற்போக்கு மீதமிச்சங்களுடன் சமரசம் செய்துகொண்டு சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் மெதுவாக முதலாளித்துவ வளர்ச்சியை சாதிக்கும் வழியை மேற்கொண்டது. ஏனெனில் முதலாளி வர்க்கத்துடன் கூடவே வளர்ந்து வந்த பாட்டாளி வர்க்க இயக்கத்தைக் கண்டு அது அஞ்சியது. பாட்டாளி வர்க்க இயக்கம் வளர்வதைத் தடுக்கவும், அதை அடக்கவும் முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ மற்றும் பிற்போக்கு சக்திகளுடன் சமரசம் செய்து கொண்டது. அவற்றுக்குள் வேறுபட்ட நலன்கள் இருப்பினும் சுரண்டல், ஆதிக்கம், மக்கள் எதிர்ப்பு ஆகியவற்றில் ஒற்றுமை இருந்ததால் இது சாத்தியமாயிற்று; முதலாளி வர்க்கத்தின் சீர்திருத்த சமரசப் பாதையில் முதலாளித்துவ வளர்ச்சி இறுதியில் முற்றாகச் சாதிக்கப்படும் எனினும் நீண்ட காலம் ஆகும், அதனால் நீண்டகாலத்துக்கு அரைநிலப்பிரபுத்துவம் தொடரும். இது பாட்டாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் சொல்லொணாத் துயரமும்

படிப்பகம்

www.padippakam.com



வேதனையும் தருவதாகும். இத்தகைய நாடுகளில் அரைநிலப்பிரபுத்துவ உறவுகளை முற்றாகத் துடைத்தெறிந்து முதலாளித்துவத்தின் சுதந்திர மான, விரைவான, விரிவான வளர்ச்சிக்கு வகை செய்யாமல் பாட்டாளி வர்க்கம் சோசலிசப் புரட்சிக்கு முன்னேற முடியாது.

2. வரலாற்றில் ஏகாதிபத்தியங்கள் உருவானபின் அவை காலனி, அரைக்காலனி நாடுகளில் தேசிய மக்களின் சுதேசி இயக்கத்தைக் கண்டு அஞ்சின. எனவே அந்நாடுகளில் நிலப்பிரபுத்துவ மற்றும் பிற்போக்கு சக்திகளுடன் கூட்டமைத்துக் கொண்டு மக்கள் இயக்கங் களை ஒடுக்கின. இத்தகைய நாடுகளில் நிலப்பிரபுத்துவம் மட்டுமின்றி, ஏகாதிபத்தியமும் முதலாளித்துவத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன. எனவே இத்தகைய நாடுகளில் நிலப்பிரபுத்துவம் மற்றும் மத்தியகால மீதமிச்சங்களையும் ஏகாதிபத்தியத்தையும் துடைத்து எறியாமல் பாட்டாளி வர்க்கம் சோசலிசத்திற்கு முன்னேற முடியாது. இந்நாடுகளின் தேசிய முதலாளி வர்க்கம் ஏகாதிபத்திய மூலதனத் தூண்டுதலால் தோன்றியதாலும், அதனைச் சார்ந்து நின்று அதன் ஆதிக்கத்தில் வளர்வதாலும், நிலப்பிரபுத்துவத்துடன் தொடர்புடையதாய் இருப்பதாலும் பலவீன மானதாயும், ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங் களுடன் சமரசமாகச் செல்வதாகவும் இருக்கிறது. இதனால் இது ஜனநாயகப்புரட்சியை நடத்தும் சக்தி அற்றதாக இருக்கிறது. சீனத்தில் இவ்வர்க்கம் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருந்ததால் குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட அளவுக்கு புரட்சிகரமானதாய் இருந்தது.

3. இத்தகைய நாடுகளில் முதலாளித்துவத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் பிற்போக் கான சக்திகளைத் துடைத்தெறியும் பணியை முதலாளி வர்க்கத்தின் கையில் விட்டுவைப்பது என்பது முதலாளிய சீர்திருத்தவாதத்திற்கு பாட்டாளி வர்க்கம் ஆதரவாய் இருப்பது என்பதாகும். மாறாக பாட்டாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயகப் புரட்சியைத் தலைமை ஏற்று நடத்துவது என்பது ஒரு புரட்சியின் மூலம் முதலாளித்துவத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும் சக்திகளைத் துடைத்தெறிவது என்பதாகும்.



4. பாட்டாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயகப் புரட்சியைத் தலைமை ஏற்று நடத்தும் போது அது முதலாளி வர்க்கம் தலைமை ஏற்கும் முதலாளித்துவப் புரட்சியிலிருந்து கீழ்க் கண்ட வகையில் மாறுபட்டிருக்கும்.

i) முதலாளி வர்க்கம் முதலாளித்துவத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும் நிலப் பிரபுத்துவம் மற்றும் அனைத்துப் பிற்போக்கு சக்திகளையும் துடைத்தெறிவதில் சீர்திருத்தப் பாதையை மேற்கொள்ளும். இதனால் நீண்ட காலத்திற்கு அரை நிலப்பிரபுத்துவ அமைப்பு நீடிக்கும். ஆனால் பாட்டாளி வர்க்கம் புரட்சிப் பாதையையே மேற்கொள்ளும். இதனால் நிலப்பிரபுத்துவம் மற்றும் அனைத்துப் பிற்போக்குகளும் உடனடியாக ஒழிக்கப்படும்.

ii) முதலாளி வர்க்கம் மக்களுக்கு எதிராக நிலப்பிரபுத்துவத் துடனும் மற்ற பிற்போக்குடனும் கூட்டுச் சேரும். பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுடன் உறுதியான கூட்டமைத்துக் கொண்டு நிலப் பிரபுத்துவத்தையும் மற்ற பிற்போக்குகளையும் துடைத்தெறியும், விவசாயி வர்க்கமும் ஒரு வகை முதலாளி வர்க்கமே எனினும் அது முதலாளி வர்க்கத்தைப் போன்று சுரண்டல் நலன், ஆதிக்க நலன் கொண்டதல்ல. மேலும் அது நிலப்பிரபுத்துவத்துடன் சமரசமற்ற முறையில் போராடும் குணாம்சம் பெற்ற உறுதியான வர்க்கமாகும். புரட்சியில் முதலில் பலன் பெறும் வர்க்கமும் விவசாய வர்க்கமே. அதனுடைய போராட்டத்திற்கே ஜனநாயகமும் சுதந்திரமும் தேவை என்பதால் பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான கூட்டுச் சக்தியாய் விவசாயிகள் வர்க்கமே இருக்கும். முதலாளி வர்க்கத்தை அப்படிப்பட்ட ஒரு நட்புச் சக்தியாக பாட்டாளி வர்க்கம் கருதாது.

iii) பாட்டாளி வர்க்கம் முதலாளிய ஜனநாயகப் புரட்சியை நடத்துவதன் மூலம் முதலாளி வர்க்க ஆட்சியை அமைக்காது. மாறாக தொழிலாளிகள் – விவசாயிகள் மற்றும் புரட்சிகர மக்களின் ஜனநாயக சர்வாதிகாரத்தையே அமைக்கும். அப்படி அமைக்கப்படும் போது மட்டுமே முதலாளிய ஜனநாயகப் புரட்சி நடைபெற்றுள்ளதாகக் கருதப்பட முடியும்.

iv) தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் புரட்சிகர மக்களின் ஜனநாயக சர்வாதிகாரம் முதலாளிய பாராளுமன்ற ஜனநாயகக் குடியரசு

படிப்பகம்

www.padippakam.com



போன்ற அரசமைப்பைக் கொண்டிருக்காது. மாறாக சோவியத் வடிவிலான பாரீஸ் கம்யூன் வடிவிலான அரசமைப்பையே கொண்டிருக்கும். அதாவது சட்டமியற்றும் அமைப்பும் சட்டத்தை அமுல்படுத்தும் அமைப்பும் ஒன்றாகவே இருக்கும். ஆயுதம் தாங்கிய படைகளும் போலீசும் மக்களிடமிருந்தே இருக்கும், தனிமைப் பட்டதாய் இருக்காது.

v) பாட்டாளி வர்க்கத் தலைமையிலான முதலாளிய ஜனநாயகக் குடியரசு பாட்டாளி வர்க்கத்தின் தயார் நிலை, பாட்டாளி வர்க்கம் ஏழை விவசாயிகளுடன் கொண்டிருக்கும் ஐக்கியம் ஆகியவற்றைப் பொறுத்து சோசலிசத்திற்கு முன்னேறும்.

நிலப்பிரபுத்துவம் மற்றும் அனைத்துப் பிற்போக்குகளையும் அழித்து முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு வழி செய்வதற்காக முதலாளியச் சீர்திருத்தவாதத்தை ஆதரிப்பது, முதலாளித்துவ வர்க்க ஆட்சியை ஆதரிப்பது, முதலாளிய பாராளுமன்ற ஜனநாயகக் குடியரசை ஏற்றுக் கொள்வது இவை அனைத்தும் முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கான முதலாளித்துவப் பாதையாகும். மாறாக நிலப் பிரபுத்துவம் மற்றும் அனைத்துப் பிற்போக்குகளையும் ஒழித்துக்கட்ட புரட்சிக்குத் தயார் செய்வது, விவசாயிகளை உறுதியான நட்புச் சக்தியாகக் கொள்வது, தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் புரட்சிகர மக்களின் ஜனநாயக சர்வாதிகாரத்தை அமைப்பது, முதலாளிய பாராளுமன்ற ஜனநாயகக் குடியரசை எதிர்த்துப் போராடுவது, பாட்டாளி வர்க்கத்தின் தயார் நிலை, ஏழை விவசாயிகளுடன் பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியம் ஆகியவற்றைப் பொறுத்து சோசலிசத்திற்கு முன்னேறுவது என்பது சோசலிசத்தை அமைப்பதற்கான பாட்டாளி வர்க்கப் பாதையாகும். திரிபுவாதிகளும், குட்டி முதலாளிய சந்தர்ப்பவாதி களும் வெவ்வேறு வடிவங்களில் முதல் பாதையை ஆதரிக்கின்றனர். மார்க்சியவாதிகள் இரண்டாவது பாதையை உயர்த்திப் பிடிக்கின்றனர்.

மாபெரும் ரசிய, சீனப் புரட்சிகள் பாட்டாளி வர்க்கப் பாதையையே உயர்த்திப் பிடித்து மாபெரும் அனுபவங்களை உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கு நல்கியுள்ளன.



# மேற்கோள் நூல் பட்டியல்


1. சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் – லெனின்.
2. மார்க்ஸ் எழுதிய நிலப்பிரபுத்துவச் சுமைகள் ஒழிப்பு மசோதா.
3. ஏங்கல்ஸ் எழுதிய புரட்சி பற்றிய பெர்லின் விவாதங்கள்.
4. சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் – லெனின்.
5. பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள் –மார்க்ஸ்.
6. லெனின் நூல் தொகுப்பு 8 பக்கம் 258.
7. சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் –லெனின்.
8. நமது புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் கடமை – ஏப்ரல் ஆய்வுரைகள், லெனின் நூல் தொகுப்பு 24 பக்கம் 57-58
9. புதிய ஜனநாயகம் – மாவோ.

10-12 சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் –லெனின்.

13 நாட்டுப்புற ஏழை மக்களுக்கு – லெனின்.

14,15 சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் –லெனின்.

16\. ஸ்டாலின் தொகுதி 5 பக்கம் 165.

17 கூட்டரசாங்கம் பற்றி – மாவோ.

18\. புதிய ஜனநாயகம் – மாவோ.

19,20 சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் – லெனின்.

21,22 புதிய ஜனநாயகம் – மாவோ.

23\. சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் – லெனின்.

24\. மாவோ, தொகுப்பு நூல் 2, பக்கம் 324.

25,26 சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள் – லெனின்.

27,28 புதிய ஜனநாயகம் – மாவோ.


படிப்பகம்

www.padippkam.com


29,30. சமூக ஜனநாயகத்தின் விவசாயத் திட்டம் – லெனின் தொகுப்பு நூல் 13 பக். 352, 353.

31,32. 1923இல் சென்டியூஷியினால் எழுதப்பட்ட 'முதலாளிய ஜனநாயகப் புரட்சியும் புரட்சிகர முதலாளிகளும்' என்ற கட்டுரை.

33. மாவோ – தேர்ந்தெடுக்கப்பட்ட நூல் தொகுதி 4 பக்கம் 421.

34. ஏப்ரல் ஆய்வுரைகள் – லெனின்.

35. மார்க்ஸ் – ஏங்கல்ஸ் தொகுப்பு நூல் 1, பக்கம் 522.

36, 37 ஏப்ரல் ஆய்வுரைகள் – லெனின்.

38,39 புதிய ஜனநாயகம் – மாவோ.

40. லெனின் தொகுப்பு நூல் 8 , பக்கம் 24.

41. லெனின் தொகுப்பு நூல் 28, பக்கம் 300.

42. புதிய ஜனநாயகம் – மாவோ.

43. மாவோ தே. ப.தொ. நூல்1, பக்கம் 279, லண்டன்.

44-46. ஏப்ரல் ஆய்வுரைகள்– லெனின்.

47. லெனின் தொகுப்பு நூல் 38, பக்கம் 192; நூல் 28 பக்கம் 73,74.

48,49. ஏப்ரல் ஆய்வுரைகள் – லெனின்.

50. புதிய ஜனநாயகம் – மாவோ.

51. ஏப்ரல் ஆய்வுரைகள் – லெனின்.

52. மாவோ தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் 5, பக்கம் 93, 94.


படிப்பகம்